257

வக்கீல்

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR ...
1 8 APR 1953
MADRAS

257
2.53

ஏப்ரல் 1953

பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட விஷயங்களையும் எளிய தமிழ் நடையில் விளக்கும் மாத வெளியீடு.

1719

அணா 6

THE VAKIL ★ TAMIL LAW MAGAZINE

கனவில் ஓர் புத்துணர்ச்சி!

கனவிலும்
காண்பது அவளையே
நினைவிலும்
நிஜாம்லேடி புகையிலையே

நிஜாம் லேடி
புகையிலை

உரிமையாளர் :
A.M.அப்துல்ரஹிமான்
நிஜாம் புகையிலை பாக்டரி
P.B.No.........4
புதுக்கோட்டை.

நாகரீக நூதன பார்டர்களில்
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள
பட்டு ஜவுளி தினுசுகள்
குறைந்த விலையில் கியாரண்டியுடன்
—கிடைக்குமிடம்—

ராணி ரெங்கய்யர் சன்ஸ்

கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு :—
20, லக்ஷிமிபுரம் 2-வது தெரு,
மதுரை.

*

பெங்களூர்
காஞ்சீபுரம்
கும்பகோணம்
பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்
ஏராளமாக
ஸ்டாக் செய்திருக்கிறோம்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள் :—
காரைக்குடி, காட்டரசன்கோட்டை.

"வக்கீல்"

பொது மக்களுக்கான
உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B.A., B.L.,
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L.,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி B.A., B.L.,
[ஆசிரியர்]

"வக்கீல்" சந்தா விபரம்

தனிப் பிரதி அணா 6. வருட சந்தா ரூ. 5 விசேஷ வருட சந்தா ரூ. 9. ஷை வெளிநாடு ரூ. 10. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதாரர்கள் கவனிக்கவும்:— வருஷ சந்தாதாரர்களுக்கு 12 மாத இதழ்களும், அந்த வருடத்திய பொருள் அட்டவணையும் அனுப்பப்படும். (பொருள் அட்டவணை தேவையில்லாதவர்கள் அணா 8 கழித்துக் கொண்டு பாக்கி ரூ. 4-8-0 அனுப்பினால் போதும்.) விசேஷ வருட சந்தாதாரர்களுக்கு மேற்கண்டவை அனுப்புவதுடன் அவ்வருடத்திற்குள் "வக்கீல்" சப்ளிமெண்டுகளாக பிரசுரமாகும் 3 சட்ட புத்தகங்களும் அனுப்பப்படும். ஆயுள் சந்தாதாரர்கள் இனி சந்தா கட்டவேண்டியதில்லை. அவர்களுக்கு மேற்கண்டவை எல்லாம் அனுப்பப்பட்டுவரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

மானேஜர் "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

"வக்கீல்"
(விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய

பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்)	ரூ.	100
உள் அட்டை முழுப் பக்கம்	ரூ.	80
உள் பக்கம் முழுப் பக்கம்	ரூ.	60
ஷை ... அரைப் பக்கம்	ரூ.	35
ஷை ... கால் பக்கம்	ரூ.	20
ஒரு காலம் - அங்குலம்	ரூ.	5

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

வக்கீல்

பொருள் அடக்கம்

மலர் 5 — ஏப்ரல் 1953 — இதழ் 4

ஸ்டாலின் .. 3

ஆந்திரரே! ஆனந்தமாகப் போய் வாருங்கள்! .. 3

நமது ஹைகோர்ட்டும் இரண்டு இடங்களில் நடந்தால் என்ன? .. 4

வரிகள்—புகையிலை வரி .. 5

கண்ட்ரோல் .. 7

வழக்கும்-தீர்ப்பும்

* ஒரு இடத்திலிருக்கும் பூர்வீகக் குடும்ப சொத்தை விற்று வேறு இடத்தில சொத்து வாங்க இந்துக் குடும்பத் தலைவருக்கு உரிமை உண்டா? .. 13
* தந்திமூலம் பாகப்பிரிவினை செய்து கொண்டு, உயில் எழுதி வைத்தார்... 15
* கோயில் நிலங்களை அனுபவித்து வரும் அர்ச்சகர்கள் — சென்னை ஹைக் கோர்ட் தீர்ப்பு. .. 17
* கணவன் சொத்தின் வருமானம், போதவில்லை என்று இந்து விதவை எல்லாச் சொத்துக்களையும் விற்று விட முடியுமா? .. 18
* வருமானவரி வழக்கு — ஒரே நபர் இரண்டு வெவ்வேறு வகை வியாபாரங்கள் நடத்தினால், ஒன்றில் ஏற்படும் நஷ்டத்தை மற்றொன்றில் கிடைக்கும் லாபத்தில் ஈடு செய்து கொள்ள முடியுமா? .. 18
* பிரிபடாத இந்துக் குடும்பத்தில் ஒரு பாகஸ்தருடைய பாத்தியம், கோர்ட் ஏலத்தில் போய்விட்டது. அவருக்கு மறுபடியும் குடும்பச் சொத்தில் பாகம் உண்டா? .. 19

சென்னை கிராமப் பஞ்சாயத்து சட்டம் 21

கேள்வியும்-பதிலும் .. 25

187721
சென்னை 600 098

கல்யாண சுபங்களுக்கு

பட்டு & நூல் ஜவுளிகள்

கிடைக்குமிடம்

ருக்மணி ஸில்க் எம்போரியம்

பெரிய தெரு, :: கும்பகோணம்.

ஹெட் ஆபீஸ் :

PHONE 84188

மைலாப்பூர் ராதா ஸில்க் எம்போரியம்

மதராஸ்.

ஆடைகளை அழகு பெறச் செய்வது
~ அன்னகிளி ~
சோப்

—தயாரிப்பவர்—
சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 38 :: தஞ்சாவூர்

தமிழில் சட்டப் புத்தகங்கள்

"வக்கீல்" பிரசுரங்கள்

"வக்கீல்" 1952-ம் வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள இதழ்கள் பொருள் அட்டவணையுடன் பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. 5 8 0

"வக்கீல்" 1951-ம் வருடம் பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. 4 0 0

விற்பனை வரி (விதிகள் உள்பட விளக்கம்) ரூ. 2 0 0

சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் [ஒத்திப் பற்றிய புதிய திருத்தம் உள்பட விளக்கம்] ரூ. 1 4 0

தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் [புதிய சட்டம், விதிகள், நமூனாக்கள், குத்தகைப் பத்திர நமூனா, வார சாகுபடிப் பத்திர நமூனா உள்பட விளக்கம்] 0 6 0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

வி. பி. பி. கிடையாது.
அணா 8 சேர்த்து அனுப்பினால்
ரிஜிஸ்டர் தபால் மூலம்
அனுப்பப்படும்.

கீழே கண்ட விலாசத்திற்கு தேவையான பிரதிகளுக்கு M. O. செய்யவும்:—

மானேஜர்,
"வக்கீல்" காரியாலயம்,
தபால் பெட்டி 26 :: கும்பகோணம் (S. I.)

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 5 **ஏப்ரல் 1953** **இதழ் 4**

ஸ்டாலின்

ஸ்டாலின் மறைந்துவிட்டார். அவருடைய உடல் இம்மண்ணுலகில் மக்கி விடும். ஆனால் அவருடைய ஆத்மாவானது, அவரால் வளர்க்கப்பட்ட சக்தியானது அப்படி மக்காது; அது இப்பூவுலகை விட்டும் அகலாது. உலக சரித்திரத்தின் போக்கை, மனிதவர்க்கத்தின் லட்சியத்தை மாற்றி அமைத்த ஸ்டாலின் என்றென்றும் பாட்டாளி மக்களின் உள்ளத்தில் குடிகொண்டிருப்பார் என்பது திண்ணம். ஸ்டாலின் உயிருடன் இருக்கும்போது அவர் உலக சமாதானத்தையே தான் நாடினார் என்பதை உலக வல்லரசுகள் எல்லாரும் இப்போது தான் ஒப்புக்கொள்ளுகின்றனர்!

ஆந்திரரே! ஆனந்தமாகப் போய்வாருங்கள்!

1953 அக்டோபர் மாதம் முதல் தேதி முதல் ஆந்திர ஜில்லாக்கள் மட்டில் சென்னை ராஜ்யத்திலிருந்து பிரிக்கப்பட்டு ஒரு தனி ராஜ்யமாக அமைக்கப்படும். பல வருடங்களாக ஆந்திரர்களின் குறிக்கோளாக இருந்த ஆந்திர ராஜ்யமானது அவர்கள் கைக்கு வந்துவிட்டது. ஆனால் அவர்கள் பேராசைப்பட்டுப் பிறர் சொத்தை அடையச் செய்த முயற்சிகள் எல்லாம் வீணாயின. முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்க ஆந்திரர் முயற்சி செய்தனர். முக்காலே அரைக்கால் பங்கு தமிழர்கள் வசிக்கும் சென்னை மாநகரில் ஆந்திரர்கள் தான் அதிகமென்று ஒரு வறட்டுப் புரளியைக் கிளப்பி விட்டனர். இதைக் கடைசியில் நமது மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதில் ஆச்சரியமொன்றுமில்லை.

1953 அக்டோபர் முதல் தேதி முதல் ஆந்திர சர்க்காரும், ஆந்திர சட்ட சபையும் சென்னைக்கு வெளியேதான் ஸ்தாபிக்கப் படுமென்பதைக் காலதாமதமின்றி, தீர்மானித்த நமது மத்திய சர்க்காருக்குத் தமிழ் மக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றனர். ஆந்திரரே, போய்வாருங்கள், ஆனந்தமாக!.

நமது ஹைகோர்ட்டும் இரண்டு இடங்களில் நடந்தால் என்ன?

சென்னை ராஜ்யத்தைவிடத் திருவாங்கூர் - கொச்சி ராஜ்யம் மிகச் சிறியதே. திருவாங்கூர் — கொச்சி ராஜ்யத்தின் ஹைகோர்ட் இப்போது வடக்கே ஏர்ணுகுளத்தில் இருக்கிறது. இப்படி இருப்பது சில மைல்கள் அப்பால் தெற்கே திருவனந்தபுரத்திலிருக்கும் மக்களுக்கு அசௌகரியமாக இருப்பதால், அந்த ஹைகோட்டின் சில நீதிபதிகள் மட்டில் தெற்கே திருவனந்த புரத்திலும் உட்கார்ந்து ஹைகோர்ட் விசாரணைகளை நடத்துவதற்காக மத்திய சர்க்கார் டில்லி பார்லிமெண்டில் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கின்றனர். சென்னைக்கும் அவ்விதமே இரண்டு இடங்களில் ஹைகோர்ட் நடந்தால் தான் பொது மக்களுக்குச் சௌகரியமாக இருக்கும். உதாரணமாக, திருநெல்வேலியிலிருந்து சென்னைக்குப் போய் ஹைகோர்ட்டில் வழக்காடுவதை விட, தமிழ் நாட்டின் மத்தியிலுள்ள ஓர் இடத்தில், மதுரையிலோ, கோயமுத்தூரிலோ, திருச்சியிலோ, சில உயர் நீதிபதிகள் உட்கார்ந்து நமது ஹைகோர்ட் நடத்தப்பட்டால், பொது மக்களுக்கு எவ்வளவோ சௌகரியமாக இருக்கும். ஆந்திர ராஜ்யம் பிரிந்து போய், ஆந்திர ஹைகோர்ட் தனியாக ஒன்று ஏற்பட்ட பிறகு இவ்விஷயத்தைப் பற்றித் தமிழ் நாட்டின் சர்க்கார் உடனடியாக முயற்சி செய்வது மிக மிக அவசியமாகும்.

கல்வி இலவசம்

சர்க்கார் 8-ம் வகுப்பு (E. S. L. C.) க்கு இலவசமாக தபால் மூலம் வீட்டிலே பாடம் கற்பித்து 1954 ஏப்ரிலில் சர்க்கார் பரீட்சைக்கு அனுப்புகிறோம். தமிழ் படிக்கத் தெரிந்த ஆண் பெண் சேர்ந்து படித்தால் சர்க்கார் உத்தியோகம் பெறலாம். விவரங்களுக்கு 2 அணா ஸ்டாம்புடன் எழுதவும்.

மானேஜர்
கலைமகள் வித்யாலயம்,
கொடிவயல், சுப்பிரமணியபுரம் P. O.
(VIA) ஆயிங்குடி, தஞ்சை Dt.

விலை மலிவு உத்தரவாதம்

அயல் நாடு உள்நாடு சைகிள்களும், சைகிள் சாமான்களும், ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். அன்பர்கள் ஒரு முறை விஜயம் செய்க.

உமா சைகிள் மார்ட்,
221, பெரியகடை வீதி,
கும்பகோணம்.

வரிகள்

1939-வருடத்திய புகையிலை விற்பனை வரி—லைசென்சுச் சட்டம் 1—4—1953 முதல் மறுபடியும் அமுல் நடத்தப்படும்.

1948ஆம் வருடத்திய 4-வது சென்னைச் சட்டத்தின் செக்ஷன் 3ல் கண்ட அதிகாரங்களை உபயோகித்து சென்னை சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். அதாவது 1939ஆம் வருடத்திய 8-வது சென்னைச் சட்டமாகிய புகையிலை விற்பனை வரி—லைசென்சுச் சட்டமானது 1—4—1953 முதல் மறுபடியும் அமுலுக்கு வரும் என்று உத்தரவிட்டிருக்கின்றனர்.

(4—3—1953 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் I-பக்கம் 329.)

[புகையிலை வரிச் சட்டத்தின் வரலாறு:—சென்னை புகையிலை விற்பனை வரி, லைசென்சு சட்டம் (The Madras Tobacco Taxation of Sales and Licensing Act.) என்பது சட்டசபையால் இயற்றப்பட்ட 1939-ம் வருடத்திய 8-வது சென்னைச் சட்டம். சட்ட சபைகளின் அதிகாரத்தையும் தாமே அப்போது செலுத்தி வந்த சென்னை கவர்னரால் இச்சட்டத்தில் 1940ஆம் வருடத்திய 4-வது சென்னைச் சட்டத்தால் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. ஆனால் 1—4—1943 முதல், மத்திய சர்க்காரால் புகையிலை சுங்க வரி (மத்திய) சட்டத்தின்படி புகையிலை மீது சுங்க வரி (Excise Duty) வசூலிக்கப்பட்டது. இரண்டுவகை வரிகளைப் புகையிலை மீது விதிப்பதில் ஏற்பட்ட அசௌகரியங்களினால் மத்திய சர்க்காரும், சென்னை மாகாண சர்க்காரும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர். சென்னை சர்க்கார் புகையிலை மீது வரி விதிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும், அதற்குப் பதிலாக சென்னை சர்க்காருக்கு மத்திய சர்க்கார் நஷ்ட ஈடுத் தொகை கொடுத்துவர வேண்டுமென்றும் இரு சர்க்கார்களும் ஒப்புக்கொண்டதன் பேரில் 1—4—1944 முதல் சென்னை சர்க்கார் புகையிலை மீது வரி வசூல் செய்வதை நிறுத்திக் கொண்டனர். அதற்காக 1944-ம் வருடத்திய 12வது சென்னைச் சட்டம் இயற்றப்பட்டது; அப்பொழுது சட்ட சபைகளின் அதிகாரத்தையும் தாமே செலுத்தி வந்த கவர்னரால்தான் இச்சட்டமும் இயற்றப்பட்டது. 1944-ம் வருடத்திய மேற்கண்ட சட்டத்தால் 1939-ம் வருடத்திய புகையிலை விற்பனை வரி லைசென்சுச் சட்டமே ரத்து செய்யப்பட்டது. ஆனால் கவர்னர் ஏகதேசத்தில் இயற்றிய மேற்கண்ட இரண்டு சட்டங்களும் அப்போதிருந்த இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி 30-4-1948 உடன் ரத்தாகி விடுவதாகச் சட்டம் இருந்தபடியால் 27-4-1948ல் இது சம்பந்தமாய் சென்னை சட்ட சபையால் 1948-ம் வருடத்திய 4-வது சட்டம் இயற்றப்பட்டது. இச் சட்டமானது 1940-ல் கவர்னர் இயற்றிய மேலே கண்டுள்ள திருத்தச் சட்டத்தை மட்டில் ஏற்றுக்கொண்டது. ஆனால் 30—4—1948 முதல் உயிர்வரக்கூடிய 1939-ம் வருடத்திய புகையிலை விற்பனை வரி லைசென்சு சட்டமானது 1940-வருடத்தில் ஏற்பட்ட திருத்தங்களுடன் அமுல் நடத்தப்படமாட்டாதென்றும்; பிறகு சென்னை சர்க்கார் எப்பொழுது உத்தரவு செய்கிறார்களோ அத்தேதி முதல் இச் சட்டமானது சென்னை ராஜ்யம் பூராவிலும் அமுலுக்கு வருமென்றும் ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டன. இப்போது சமீபத்தில் நிதிக் கமிஷன் செய்துள்ள சிபார்சின்படி சென்னை ராஜ்ய சர்க்காரே புகையிலை விற்பனை வரி வசூல் செய்யப்போவதால் 1939ம் வருடச் சட்டம் 1—4—1953 தேதி முதல் அமுலுக்கு வருமென்று உத்தரவிட்டிருக்கின்றனர். 4—3—1953 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I. பக்கம் 329 பார்க்கவும். ஆகையால் 1—4—1953 முதல் அமுலுக்கு வரும் புகையிலை வரிச் சட்டம் 1939-ம் வருடத்திலேயே இயற்றப்பட்டது. அதைப் புதிதாக இயற்ற வேண்டிய அவசியமில்லை. சென்னை சர்க்காரின் மேற்கண்ட உத்தரவே அச்சட்டத்திற்கு உயிர் மூட்டிவிட்டது.]

புகையிலை விற்பனைவரி—லைசென்சுச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள்

1-4-1953 முதல் அமுலுக்கு வரும் புகையிலை விற்பனை-வரி லைசென்சுச் சட்டத்திலும் அச்சட்டத்தை அனுசரித்து சென்னை சர்க்காரால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் விதிகளிலும் உள்ள சில முக்கிய அம்சங்கள் மட்டில் இங்கே மிகச் சுருக்கமாக குறிப்பிடப் பட்டிருக்கின்றன. இச் சட்டத்திலும் விதிகளிலும் சில திருத்தங்கள் செய்ய சர்க்கார் உத்தேசித்திருக்கிற படியால், அடுத்த மாத "வக்கீல்" இதழில் இச்சட்டமும் விதிகளும் மிக விளக்கமாக விமர்சனம் செய்யப்படும்.

லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டும்.

இச்சட்டப்படி லைசென்சு வாங்கிக் கொள்ளாமல் தொழில் செய்வது குற்றமாகும். லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டியவர்கள்:—(1) புகையிலை மொத்த வியாபாரி—Whole Sale Dealer - (2) புகையிலை வேலைப்பாடு செய்பவர்கள்—Manufacturers. (3) தரகர்கள்—Brokers (4) கமிஷன் ஏஜண்டுகள்-Commission Agents (5) வேலைப்பாடு செய்யப்பட்ட புகையிலையில் சில்லறை வியாபாரம் செய்பவர்கள்—Retail Dealers.

'வேலைப்பாடு செய்யப்பட்ட புகையிலை (Manufactured Tobacco) என்றால் சிகார், சுருட்டு, சிகரெட்டு, சிகரெட் புகையிலை, பைப்புகையிலை, பீடி, பொடி—இவைகளைக் குறிக்கும். சில்லறை வியாபாரிகளுக்கு லைசென்சு கட்டணம் கிடையாது. மற்றவர்களுக்கு உண்டு. அசிஸ்டெண்டு கமர்சியல் டாக்ஸ் ஆபீசரிடம் (எ. ஸி. டி. ஓ) லைசென்சுக்கு மனுப்போட வேண்டும். புகையிலை பயிர் செய்பவர்கள் லைசென்சு வாங்க வேண்டியதில்லை.

விற்பனை வரி. மொத்த வியாபாரிகளும் சில்லறை வியாபாரிகளும் இச்சட்டத்தில் கண்ட விகிதப்படி விற்பனை வரி கட்ட வேண்டும்.

எவரும் ஒரு அளவுக்கு மேல் புகையிலையைக் கைவசம் வைத்திருக்கக் கூடாது. புகையிலைப் பயிர் செய்பவர்களையும், இச் சட்டப்படி லைசென்சு வாங்கிக்கொண்டிருப்பவர்களையும் தவிர, வேறு எவரும் இதனடியிற் கண்ட அளவுக்குமேல் புகையிலையைத் தம் வசம் வைத்திருக்கக்கூடாது. அதாவது.

(1) சிகார் அல்லது சுருட்டு	200
(2) சிகரெட்டு	300
(3) சிகரெட்டுப் புகையிலை	1 பவுண்டு
(4) பைப் புகையிலை	1 பவுண்டு
(5) பீடி	200
(6) பொடி	1 அவுன்சு
(7) புகையிலை — பாடம் செய்யப்பட்ட அல்லது பாடம் செய்யப்படாத இலை	1 பவுண்டு

இதற்குமேல் வைத்துக் கொள்ளப் பர்மிட் வேண்டும்.

விற்பனை வரி விதி விலக்கு—காது கேட்பதற்கான எலெக்ட்ரிக் சாதனங்கள்.

காது கேட்பதற்கான எலெக்ட், கருவிகள் அதைச் சேர்ந்த சாதனங்கள், இவற்றின் விற்பனைக்கு விற்பனை வரி கிடையாதென சென்னை சர்க்கார் விதிவிலக்கு அளித்திருக்கின்றனர்.

(11—3—1953 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் I. பக்கம் 373.)

"வக்கீல்" பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலேயே பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. தபால் மூலம் அனுப்பப்படும் பத்திரிகை 5-ம் தேதிக்குள் உங்களிடம் கிடைக்காவிட்டால், உடனே "வக்கீல்" காரியாலயத்திற்கு ஒரு கார்டு எழுதவும் சந்தா நம்பரையும் விலாசத்தையும் புரியும்படி எழுதவும்.

ஏஜண்டுகள் மூலம் "வக்கீல்" வாங்கிவரும் இந்தியாவிலிருக்கும் நேயர்களுக்கும் 4-ம் தேதிக்குள் "வக்கீல்" கிடைக்காவிட்டால் ஆபீசுக்கு எழுதி தருவித்துக்கொள்ளலாம்.

வெளிநாட்டிலிருக்கும் சந்தாதாரர்கள் சந்தத் தொகையை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் ஏர்மெயிலில் ரிஜிஸ்டர்செய்து அனுப்பலாம்.

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்
இதர சர்க்கார் அறிக்கைகள்

சென்னை உணவு தானிய 'லெவி'க் கொள்முதல்—விலைக் கட்டுப்பாடு உத்தரவு (1953)

1946-ம் வருடத்திய அத்தியாவசியப் பண்டங்களைப் பற்றிய தாற்காலிக அதிகாரச் சட்டத்தில் கண்ட அதிகாரத்தை உபயோகித்துச் சென்னை சர்க்காரால் இக்கட்டுப்பாடு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. (3-3-1953 தேதியுள்ள G. O. No. 294.)

(1) இவ்வுத்தரவுக்குச் சென்னை உணவு தானிய 'லெவி' கொள்முதல் விலைக் கட்டுப்பாடு உத்தரவு (1953) என்று பெயர். இவ்வுத்தரவானது 1952-ம் வருடத்திய சென்னை உணவு தானிய 'லெவி'க் கொள்முதல் உத்தரவின்படி 'கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கும் அரிசிக்கும் பொருந்தும். இவ்வுத்தரவு உடனடியாக அமுலுக்கு வந்துவிட்டது.

(2) இந்த உத்தரவில் எப். ஓ. ஆர். F.O.R. விலை என்றால் தஞ்சை ஜில்லாவிலும், கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் ஜில்லாக்களிலும், மில்காரர்களாலோ, மில்காரர் அல்லாத மொத்த வியாபாரியாலோ, உற்பத்தியாளராலோ ஜில்லா சப்ளை ஆபீசருக்கு விற்கப்பட்டு ஜில்லா சப்ளை ஆபீசர் சார்பாக ரயில்வே வாகன்களில் ஏற்றப்பட்ட நெல் அல்லது அரிசிக்காக அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய விலையைக் குறிக்கும். இதில் சாக்கு விலை சேர்ந்ததல்ல.

"மில் வாயில் விலை" (Ex Mill Price) என்றால் மேலே கண்ட ஜில்லாக்களில் மில்காரர்களாலோ, மில்காரர் அல்லாத மொத்த வியாபாரிகளாலோ மில்லிலோ, கிடங்கிலோ ஜில்லா சப்ளை ஆபீசருக்கு அல்லது அவரால் குறிப்பிடப்படும் உத்தியோகஸ்தருக்கு விற்கப்படும் நெல் அல்லது அரிசியின் விலையைக் குறிக்கும். இதிலும் சாக்கின் விலை சேர்ந்ததல்ல.

இவ்வுத்தரவின்படி தஞ்சை ஜில்லா சம்பந்தப்பட்டவரையில் அடியில் கண்டபடி விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

தஞ்சை ஜில்லாவில்	ஒரு இம்பீரியல் மணங்குக்கு விலை											
	நெல்						அரிசி					
	முதல் தரம்			இரண்டாம் தரம்			முதல் தரம்			இரண்டாம் தரம்		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
மில்காரர்களும் மொத்த வியாபாரிகளும், 'டிலிவரி' கொடுப்பதற்கு F. O. R. விலை.	10	8	3	10	0	3	15	9	6	14	14	3
உற்பத்தியாளர் 'டிலிவரி' கொடுப்பதற்கு F. O. R. விலை.	9	15	6	9	7	9	14	12	9	14	1	6
மில் வாயில் விலை.	10	7	3	9	15	3	15	8	6	14	13	3

மேற்கண்ட விலையானது விற்பனை நீங்கலாக. மேற்கண்ட F. O. R. அரிசி விலைகள் எல்லாம் புழுங்கல் அரிசியின் விலை. பச்சை அரிசிக்கு இம்பீரியல் மணங்கு 1க்கு அணா 4 அதிகம் கொடுக்கப்படும். கைக் குத்தல் அரிசியாக இருந்தால் மேலே கண்ட விலைக்குமேல் இம்பீரியல் மணங்கு ஒன்றுக்கு அணா 6 கூடுதலாகும். மில் வாயில் விலையில் பச்சை அரிசிக்கும் புழுங்கல் அரிசிக்கும் உள்ள விலை வித்தியாசமானது ஜில்லா கலெக்டரால் நிர்ணயம் செய்யப்படு

ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். நெல் அரிசி இவைகளின் ரகம் எப்படி இருக்கவேண்டு மென்றும் இவ்வுத்தரவில் விவரமாக குறிப்பிடப் பட்டிருக்கிறது.

(4—3—1953 சென்னை சர்க்கார் கெஜட்—விசேஷ வெளியீடு—பாகம் II.)

குறிப்பு:—மேர்கண்ட விலைக்கட்டுப்பாடுகள் எல்லாம் மில்காரர்களாலோ, மொத்த வியாபாரி களாலோ, உற்பத்தியாளர்களாலோ ஜில்லா சப்ளை ஆபீசருக்கு நேரடியாக விற்கப்படும் நெல் அரிசி இவற்றின் விலை தான். நிலச் சுவான்தார் முதலியவர்களால், 'லெவி'க்காகக் கொள் முதல் ஏஜண்டிடம் விற்கப்படும் நெல்லின் கிராம விலையானது இக் கட்டுப்பாடு உத்தரவில் இல்லை. அவ்விலை 'லெவி'க் கொள் முதல் உத்தரவின் 3-வது ஷிடியூலில் கொடுக்கப் பட்டிருக்கிறது.

சென்னை உணவு தானிய (லெவி) குத்துமதிப்புக் கொள்முதல் உத்தரவுத் திருத்தம்.

தஞ்சை ஜில்லாவிலும் சில ஆந்திர ஜில்லாக் களிலும் அமுலில் இருக்கும் உணவு தானிய 'லெவி'க் கொள்முதல் உத்தரவில் சென்னை சர்க்காரால் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக் கின்றன. அவையாவன:—'லெவி'க்கு நெல் கொடுக்க யார் யார் கடமைப்பட்டவர்கள் என் பதுபற்றிய ஷரத்து 3 (1)—கீழே கண்டபடி மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது:—3 (1) (a) ஷிடியூல் Iல் கண்ட பிரதேசங்களில் 5 ஏகருக்கு மேல் சொந்த நிலம் உள்ளவர்கள், 1362ம் பசலியிலோ, பிந்திய பசலிகளிலோ அந்நிலத்தில் நெல் சாகுபடி செய்திருந்தாலும் சரி, இனி செய்தாலும் சரி; அல்லது அதைக் குத்தகைக்குவிட்டிருந்தாலும் சரி, இனி குத்த கைக்கு விட்டாலும் சரி அவ்வித நிலச்சுவான் தார்களும் (b) மேற்கண்ட இடங்களில் 5 ஏக ருக்கு மேல் சொந்த நிலமுள்ள நிலச்சுவான் தார்களிடம் நிலத்தை சாகுபடிக்கோ, குத்த கைக்கோ, உள் குத்தகைக்கோ, ஒப்புக்கொண்டு அல்லது வேறு ஹோதாவில் அவ்வித நிலங் களில் மேற்கண்ட பசலிகளில் நெல் சாகுபடி செய்பவர்களும், அதைச் சாகுபடிக்காக வேறு

ஒருவரிடத்தில் குத்தகைக்கு விடுபவர்களும்—ஆகிய இவர்கள் 2-வது உட்பிரிவின்படி நிர்ணடீம் செய்யப்படும் உபரி நெல் அல்லது அரிசியை ஜில்லா கலெக்டரிடமோ, அல்லது அவரால் நியமிக்கப்பட்டு ஜில்லா கெஜட்டில் விளம்பரம் செய்யப்படும் கொள்முதல் ஏஜண்டிடமோதான் விற்பனை செய்யவேண்டும்; வேறு ஒருவரிடமும் அந்த உபரி நெல்லை விற்பனை செய்யக்கூடாது என்பது ஒரு திருத்தம். அதாவது யார் யார் 'லெவி' நெல் அளக்கக் கடமைப்பட்டவர்கள் என்பது முன் இருந்ததைவிட கொஞ்சம் விளக்கமாக்கப்பட்டிருக்கிறது.

'உபரி தானியம்' என்பது எவ்வளவு என்று கலெக்டரோ அவரிடம் அதிகாரம் பெற்ற ஒரு அதிகாரியோ, 'லெவி' உத்தரவின் ஷிடியூல் IIல் கண்ட விகிதப்படி நிர்ணயம் செய்யவேண்டுமென்றும்; அவசியமான சந்தர்ப்பங்களில் 'லெவி' விகிதத்தைக் குறைத்து நிர்ணயம் செய்யவும் அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறதென்று ஏற்கனவேயே உள்ள ஷரத்து 3(2)ல் இருக்கிறது. அதாவது முதலில் நிர்ணயம் செய்யும்போதே அவசியமானல் 'லெவி' அளவைக் குறைத்து நிர்ணயம் செய்துவிடலாமே ஒழிய, இவ்வதிகாரிகள் 'லெவி' எவ்வளவு என்று ஒரு தடவை நிர்ணயம் செய்துவிட்டால் அதை மாற்ற அவர்களுக்கு இதுவரை அதிகாரம் இல்லாமல் இருந்தது. அவ்வதிகாரமும் இத் திருத்தத்தால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக 3 (2) ஷரத்தில் கீழே கண்டபடி சேர்க்கப்பட்டிருக்கிறது.

அதாவது, 'லெவி' விகிதம் மாற்றப்படும் காரணத்தினலோ, அல்லது 'லெவி'க் கணக்குச் செய்த நிலங்களின் விஸ்தீர்ணத்தைப் பொருத்து ஏற்பட்ட தவறு காரணமாகவோ, மறுபடி 'லெவி' அளவை நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால், 'லெவி' அளவை அவ்வப் பொழுது மாற்றி வேறு உத்தரவு பிறப்பிக்க 'லெவி' நிர்ணயம் செய்த அதிகாரிக்கும், அவருக்கு மேற்பட்ட அதிகாரிக்கும் அதிகாரமுண்டு என்று ஒரு ஷரத்து இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறது.

மற்றொரு திருத்தம்:—நிலத்தைச் சாகுபடி செய்பவர்தான் அதிலுள்ள நெல் மகசூலைக் கலெக்டருடைய அனுமதியின்றி வேறு ஒருவருக்கும் விற்பனை செய்யக் கூடாதென்று, சந்தேகம் தோன்றும் படியான வாசகம் ஷரத்து 4 ல் இருந்தது. இப்போது ஏற்பட்ட திருத்தப்படி 'லெவி' அளக்கக் கடமைப் பட்ட, அதாவது ஷரத்து 3 (1) ல் குறிப்பிடப் பட்டிருக்கும் எவரும் நிலத்திலுள்ள மகசூலை கலெக்டருடைய அனுமதியின்றி விற்கக் கூடாதென்று ஷரத்து 4 திருத்தப் பட்டிருக்கிறது.

ரயில்வே போலீஸ் உள்பட சப்இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் குறையாத எந்த போலீஸ் அதிகாரியும் உணவு தானியம் இருக்கும் இடங்களையும், அவை ஏற்றிச் செல்லப்படும் வாகனங்களையும், பரிசோதனை செய்யலாமென்று ஷரத்து 6 திருத்தப்பட்டிருக்கிறது. இவை தவிர லெவிக் கொள்முதல் உத்தரவு அமுலில் இருக்கும் சில கிராமங்களின் பெயர்களில் இருந்த எழுத்துப் பிழைகள் திருத்தப்பட்டிருக்கின்றன.

(18-3-1953--சென்னை சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட் பாகம் II—பக்கம் 31.)

குறிப்பு:—உணவு தானிய 'லெவி'க் கொள்முதல் உத்தரவு 19-11-1952 தேதியுள்ள G. O. 1796 மூலம் சென்னை சர்க்காரால் பிறப்பிக்கப்பட்டது. 20-11-1952 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II விசேஷ வெளியீட்டில் இவ்வுத்தரவு பிரசுரம் செய்யப் பட்டிருக்கிறது. 'லெவி'க் கொள்முதல் உத்தரவு 'வக்கீல்' 1952 டிசம்பர் இதழ் பக்கம் 7 ல் விளக்கப்பட்டிருக்கிறது. அதில் 10-11-1952 தேதி சென்னை சர்க்கார் கெஜட் விசேஷ வெளியீட்டில் இவ்வுத்தரவு பிரசுரம் செய்யப் பட்டிருப்பதாக இருப்பது அச்சுப்பிழை. "10-11-1952" என்பதை "20-11-1952"—என்று திருத்தி வாசிக்கவும்.

உணவு தானிய லைசென்சு—கொள்முதல் உத்தரவு (1952) அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள்.

1952ம் வருடத்திய மத்திய சர்க்கார் உணவு தானிய லைசென்சு-கொள்முதல் உத்தரவின்

கல்யாண
பட்டுநூல்
ஜவுளிகளுக்கு

★

ராதா ஸில்க்
எம்போரியம்

★

119, பெரிய தெரு, :: கும்பகோணம்.

ஸ்ரீ மகாலெக்ஷ்மி துணை
திருக்காட்டுப்பள்ளியில்
பஸ் ஸ்டாண்டுக்கு சமீபத்திலுள்ள
திருச்சி கபே
ஹோட்டலில் கை தேர்ந்த
பிராமணர்களைக் கொண்டு தயாரிக்கப்
பட்ட ருசிகரமான இனிப்பு பக்ஷணங்களும்
இனிமையான குளிர்ந்த பானங்களும் கிடைக்கும்.
டீபார்ட்டி, டின்னர் பார்ட்டிகளுக்கு ஆர்ட
ரின் பேரில் குறித்த காலத்தில் சப்ளை
செய்யப்படும். ஒருமுறை விஜயம் செய்யவும்.

படி சென்னை ராஜ்ய சர்க்கார் செலுத்தக் கூடிய சில அதிகாரங்களை கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்களும், செலுத்துப்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவையாவன:—9 (1) ஷரத்தப்படி உணவு தானிய லைசென்சை ரத்து செய்யும் அதிகாரமும் 'சஸ்பெண்ட்' செய்யும் அதிகாரமும் அவரவர் அதிகார எல்லைக்குள் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. 10-வது ஷரத்துப்படி உணவு தானியத்தைக் கைவசம் வைத்திருப்பவருக்கு அதை பூராவுமோ ஒரு பாகத்தையோ குறிப்பிட்ட நபருக்கு அல்லது குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த நபர்களுக்கு குறிப்பிட்ட விலைக்கு விற்கவேண்டுமென்று உத்தரவு செய்யக்கூடிய அதிகாரத்தை அவரவர் அதிகார எல்லைக்குள், ஜில்லா கலெக்டர், ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர், தாசில்தார், டிப்டி தாசில்தார், ஜில்லா சப்ளை ஆபீசர், சிவில் சப்ளைஸ் தாசில்தார், தாலூக்கா சப்ளை ஆபீசர், இவர்களும் செலுத்தலாம். 11-வது ஷரத்துப்படி, ஒரு வியாபாரிக்குக் கொடுக்கப்படும் கடன் சம்பந்தமான தகவல்களை தெரிவிக்கும்படி பாங்குகளைக் கேட்கும் அதிகாரத்தை அவரவர் அதிகார எல்லைக்குள், ஜில்லா கலெக்டரும், ரிவென்யூ டிவிஷனல் ஆபீசரும், டிஸ்டிரிக்ட் சப்ளை ஆபீசரும் செலுத்தலாம். 13-வது ஷரத்துப்படி சோதனை செய்யும் அதிகாரமானது உதவி தாலூக்கா சப்ளை ஆபீசர் அந்தஸ்தக்குக் குறையாத எல்ல ரிவென்யூ இலாகா உத்தியோகஸ்தர்களுக்கும், சப்இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் குறையாத எல்லா போலீஸ் (ரயில்வே போலீஸ் உள்பட) அதிகாரிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(G. O. 354—18-3-1953 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் II—பக்கம் 375.)

உணவு தானிய 'லைசென்சு' தார்களுக்கு நிபந்தனைகள்—மதுரை (தெற்கு) ஜில்லாவில்

1952-ம் வருடத்திய உணவு தானிய லைசென்சு—கொள்முதல் உத்தரவின் A நமூனா 9-வது நிபந்தனையில் கண்ட அதிகாரத்தை உபயோகித்து (தெற்கு) மதுரை ஜில்லா லைசென்சு

அதிகாரியாகிய கமர்சியல் டாக்ஸ் ஆபீசரால் கீழேகண்ட நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதாவது சர்க்கார் மேன்பார்வைக்குட்பட்டு நெல் அரிசி ஸ்டாக் வைத்திருக்கும் லைசென்சுதாரர்கள்:—(1) சர்க்கார் சார்பில் வைத்திருக்கும் நெல் அரிசி தவிர வேறு நெல் அரிசியை பகிரங்க மார்கெட்டில் விற்பனை செய்யக் கூடாது. (2) இப்போது அவர்கள் கைவசம் இருக்கும் ஸ்டாக்கை ஜில்லா கலெக்டர் அல்லது அவரிடம் அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தரின் உத்தரவுப்படிக்கல்லாமல் வேறு எவருக்கும் விற்பனை செய்யக் கூடாது. (3) மேற்கண்ட நிபந்தனைகள் இவ்வுத்தரவுத் தேதி முதல் 3 மாதங்களுக்கு அமுலில் இருக்கும். இந்த நிபந்தனைகளை மீறும் லைசென்சுதாரர்களின் லைசென்சுகள் ரத்தாவதுடன் அவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படும். இவ்வுத்தரவு 17—2—1953ல் பிறப்பிக்கப்பட்டது.

(4—3—1953 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் II பக்கம் 293.

மதுரை (தெற்கு) ஜில்லா உணவு தானிய நியாய விலைக் கடைக்காரர்களுக்கு நிபந்தனைகள்.

உணவு தானிய லைசென்சு கொள்முதல் உத்தரவு-நமூனா A லைசென்சின் 9-வது நிபந்தனையில் கண்ட அதிகாரப்படி மதுரை (தெற்கு) கமர்சியல் டாக்ஸ் ஆபீசரால் நியாய விலைக்கடைக்காரர்களுக்கு கீழே கண்ட நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. (1) அவ்வப்பொழுது கலெக்டராலோ, கலெக்டரிடம் அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தராலோ நிர்ணயம் செய்யப்படும் சில்லரை வியாபார விலைக்குமேல் உணவு தானியங்களை விற்கக்கூடாது. (2) ரேஷன் கார்டு அல்லது பர்மிட் உள்ளவர்களுக்கு விற்கப்படும் உணவு தானியத்தின் ரகம், மொத்த வியாபாரி அல்லது மில் காரரிடமிருந்து உணவு தானியம் வரும்போது எப்படி இருந்ததோ அதற்குக் குறைவாக இருக்கக் கூடாது. (3) அவசியமான ஸ்டாக் ரிடர்ன் கணக்கும் மற்ற கணக்குகளும் கலெக்டர் அல்லது அதிகாரமுள்ள மற்ற உத்தியோகஸ்தர்களுடைய உத்தரவுப்படி வைத்துக்கொள்ளப்படவேண்டும் (4) கலெக்டரால் நிர்ணயம் செய்யப்படும் மணி நேரங்களில் வேளையிலேயே தான் உணவு தானியங்கள் விற்பனை செய்யப்படவேண்டும் (5) உணவு தானியம் எவ்வளவு வேண்டுமென்பதை சரியான காலத்தில் தெரிவித்து, 'அலாட்' செய்யப்பட்ட உணவு தானியத்தை மொத்த வியாபாரி அல்லது மில் காரர்களிடமிருந்து தாமதமாய் எடுத்துக் கொள்ளப் படவேண்டும். (6) குறிப்பாக அனுமதிக்கப் பட்டிருந்தாலொழிய நியாய விலைக்கடைக்காரர்கள் பகிரங்க மார்கெட் அரிசி வியாபாரத்தில் ஈடுபடக் கூடாது.

மேற்கண்ட நிபந்தனைகள் மீறப்பட்டால் லைசென்சு ரத்துசெய்யப்படுவதுடன் கிரிமினல் நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்படும்.

(18—3—1953 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் II பக்கம் 366.)

தஞ்சை சாகுபடிதார்--பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்--குத்தகை அல்லது வாரச் சீட்டு எழுத 30-4-1953 வரை கெடு நீடிக்கப் பட்டிருக்கிறது.

தஞ்சை சாகுபடி தார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டப்படி எழுத வேண்டிய குத்தகைச் சீட்டுகளையும் வாரச் சீட்டுக்களையும் எழுத 30-4-1953 வரை கெடு நீடிக்கப் பட்டிருக்கிறது. தஞ்சைச் சட்ட விதி 10-ல் கண்ட அதிகாரத்தை உபயோகித்து மேற் கண்ட விதம் சென்னை சர்க்கார் இக்கெடுவை நீடித்திருக்கின்றனர்.

(11-3-1953—சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் I பக்கம் 383.)

சென்னை உணவு தானிய லைசென்சு-கொள்முதல் உத்தரவு--தஞ்சை ஜில்லாவில் உற்பத்தியாளர்கள் லைசென்சு வாங்க வேண்டியதில்லை. விதிவிலக்கு.

தஞ்சை ஜில்லாவில் உணவு தானியங்களை நேரிலோ, குத்தகை அல்லது சாகுபடிதார் மூலமோ உற்பத்தி செய்பவர்கள், அவர்றை

"குல்ஷபா"
இரத்த சுத்தி லேகியம்

இரத்தத்தை சுத்தி செய்து, ஜீரணத்தை அதிகரித்து மலச்சிக்கலை நீக்கி, வயற்று வலி, ஈரல் குலை வலி, இருமல், பித்த வாய்வு இவைகளை குணப்படுத்தி நரம்புகளுக்கு பலம் கொடுத்து பாலிய நரையை மாற்றி இளமை அளிக்கும். தோல் சம்பந்தமான சகல வியாதிகளையும், நாள்பட்ட இருமல், நாள்பட்ட தலைவலி குணப்படுத்தும் சாப்பிடுவதற்கு அதிக ருசிகரமாய் இருக்கும் பத்தியம் கிடையாது.

10 நாள் 20 வேளை மருந்து டின் 1-க்கு
விலை ரூ. 2-0-0

டாக்டர் ஜி. எஸ். அமீனதீன், எம். டி. எம். எஸ்
ஹோமியோ கிளினிக்,
ரயில்வே ரோடு, கும்பகோணம்.

விற்கவும், விற்பனைக்காகவோ, அல்லது தமக்கும் தம்முடைய குடும்பத்திற்கும் சாப்பாட்டுக்காகவோ, சேகரம் செய்து ('ஸ்டோர்' செய்து) வைக்கவும் உணவு தானிய லைசென்சு கொள்முதல் உத்தரவின் 3-வது ஷரத்தின்படி யாதொரு லைசென்சும் வாங்க வேண்டியதில்லை என்று அவர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

(25-2-1953—சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் II பக்கம்—250)

தஞ்சை ஜில்லா ரைஸ் மில் காரர்கள் கட்ட வேண்டிய டிபாசிட் தொகை நிர்ணயம்.

தஞ்சை ஜில்லாவிலுள்ள கொள்முதல் செய்த நெல்லை அறைக்கும் பெரிய ரைஸ் மில்கள் ரூ. 500-ம், கூலி மில்கள் ரூ. 100-ம் டிபாசிட் கட்ட வேண்டுமென்று சென்னை (1951) ரைஸ்மில் லைசென்சு உத்தரவின் 9-வது ஷரத்தில் கண்ட அதிகாரத்தை உபயோகித்து தஞ்சை கலெக்டரால் டிபாசிட் தொகை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வுத்தரவு உடனடியாக அமுலுக்கு வரும்.

(4-3-1953—சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II—பக்கம் 277)

எங்கும் புகழ் பெற்ற அற்புத சஞ்சீவி

"ஜெயராம்" காயசுத்தி லேகியம் (Regd. No. 138512)

இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும்.
ஆயிரக்கணக்கான மக்களால் தினமும் உபயோகிக்கப்படுவது.

தலைவலி, மயக்கம், வாந்தி, கழுத்துப் பிடரிவலி, நெஞ்சுவலி முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்செரிச்சல், அஜீரணம், வயற்றுப்பிசம் வயற்றுவலி, இடுப்புவலி, கைகால் வலி, கிருமிகளின் உபாதை, நாள்பட்ட மலச்சிக்கல், இருமல், நெரிக்கட்டிய சுரம், மூலநோய் முதலியவைகளை நீக்கி பசியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும்

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்

1 சேர் ரூ. 4-8-0   ½ சேர் ரூ. 2-4-0

வி. பி. பி. செலவு தனி

உங்கள் வியாதி எதுவாயினும் ஜெயராம் வைத்தியசாலைக்கு வாருங்கள்

தயாரிக்குமிடம்:— ஜெயராம் வைத்தியசாலை, 28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.

[இப் பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.]

ஒரு இடத்திலிருக்கும் பூர்வீகக் குடும்பச் சொத்தை விற்று வேறு இடத்தில் சொத்து வாங்க இந்துக் குடும்பத் தலைவருக்கு உரிமை உண்டா?

[ஆதாரம்:—1953 ஆல் இந்தியா ரிப்போர்ட்டர் மதராஸ்—210.]

பிரிபடாத இந்துக் குடும்பத்துக்குச் சொந்தமான 'பொதுக் குடும்ப சொத்து'க்களைப் பற்றி இந்துச் சட்டத்தில் சில விசேஷ விதிகள் இருக்கின்றன. இச் சொத்துக்கள் அக் குடும்பத்தினர்கள் யாவருக்கும் உரிமை உள்ளவை. பொதுக் குடும்பத்தைச் சேர்ந்த எவரும் தமக்கு இஷ்டப்படும்போது குடும்பத்தைவிட்டுப் பிரிந்து போகலாம்; பொதுச் சொத்துக்களில் தமக்குள்ள பாகத்தையும் அவரவர் பிரித்துக் கொள்ளலாம். ஆனால் குடும்பம் பொதுவாக இருக்கும் வரையில், அக் குடும்பத்தின் தலைவருக்குச் சில விசேஷ அதிகாரங்கள் உண்டு. இவ்வதிகாரங்களுள் ஒன்று என்னவென்றால் சில சந்தர்ப்பங்களில் அவர் அக் குடும்பச் சொத்துக்களைத் தாமே மற்றவர்களுடைய சம்மதமில்லாமலே விற்பனை முதலிய பராதீனங்கள் செய்துவிடலாம். அவர் அப்படிச் செய்வது மற்றக் குடும்ப அங்கத்தினர்களையும் கட்டுப்படுத்தும். இதை வேறு தினுசாக விளக்கலாம்:-பல நபர்களுக்குச் சொந்தமான சொத்து ஒன்றை விற்பனை செய்யவேண்டுமானால், சொந்தக்காரர்கள் யாவரும் சேர்ந்து, கிரயப் பத்திரம் எழுதிக் கொடுக்கவேண்டுமென்பதுதான் பொது விதி. அப்படி இல்லாமல், பல நபர்களுக்குச் சொந்தமான சொத்தை ஒருவர் மட்டில் விற்பனை செய்தால், விற்பனை செய்பவருடைய வீதம் எவ்வளவோ அது மட்டில்தான் கிரயம் வாங்குபவருக்கு மாறும். மற்ற நபர்களுடைய பாத்தியம் அவரவர்களிடமேதான் இருக்கும். இவ் விதிக்கு ஒரு விதிவிலக்காக இருக்கிறது அவிபக்த இந்து குடும்பத் தலைவரின் இவ் விசேஷ உரிமை. உதாரணமாக—ஒரு பிரிபடாத இந்துக் குடும்பத்தில் அண்ணன் தம்பிகளும், ஒவ்வொருவருக்கும் ஆண் மக்கள் பலரும் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். யாவரும் வயது வந்த 'மேஜர்'கள் என்றும் வைத்துக் கொள்ளுவோம். அவர்கள் யாவருக்கும்

சொந்தமாயும் பொதுவாகவும் இருக்கும் குடும்பச் சொத்துக்களை அக் குடும்பத் தலைவர், அதாவது சாதாரணமாகச் சகோதரர்களில் மூத்தவர், சில சந்தர்ப்பங்களில் மட்டும் மற்றச் சகோதரர்களையோ அவர்களுடைய மக்களையோ கலக்காமல் கூட, பொதுக் குடும்பச் சொத்தை விற்றுவிடலாம். அவர் செய்யும் விற்பனையானது மற்றக் குடும்ப அங்கத்தினர்களையும் கட்டுப்படுத்தும். குடும்பத் தலைவர் இப்படி விற்றுவிட்ட சொத்தில் மற்றக் குடும்ப அங்கத்தினர்களுக்குப் பாகமோ பாத்தியமோ கிடையாது.

எந்தச் சந்தர்ப்பங்களில், குடும்பத் தலைவர் இவ்விதம் குடும்பச் சொத்துக்களைத் தாமே பராதீனம் செய்துவிடலாமென்றும் இந்தச் சட்டத்தில் இருக்கிறது.

'மிதாக்ஷரம்' என்ற புராதன இந்துச் சட்ட நூலில், குடும்பத் தலைவரானவர் மூன்று சந்தர்ப்பங்களில் இவ்விதம் குடும்பச் சொத்தைப் பராதீனம் செய்து விடலாமென்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதாவது (1) ஆபத்துக் காலத்திலும், (2) குடும்பார்த்தமாயும், (3) தர்மார்த்தமாயும்—குடும்பச் சொத்துக்களைக் குடும்பத் தலைவர் மட்டுமே பராதீனம் செய்துவிடலாமென்று அந் நூலில் இருக்கிறது. இதற்கு அர்த்தம் என்ன என்பதையும் பல நீதிபதிகள் விளக்கி இருக்கின்றனர். உதாரணமாகக் குடும்பத்தில் நடக்கும் கலியாணச் செலவுகள், குடும்பத்தினரின் போஷணை, படிப்பு, குடும்பக் கடனைக் கொடுப்பது, சர்க்கார் கிஸ்தி கொடுப்பது, சொத்துக்களைப் பற்றி விவகாரங்களுக்கான செலவுகள் போன்ற எவ்வளவோ ஆயிரக் கணக்கான அவசியமான குடும்பச் செலவுகள் இருக்கின்றன. இச் செலவுகளுக்காகக் குடும்பச் சொத்துக்களைக் குடும்பத் தலைவர் விற்பனை அடமானம் முதலிய பராதீனங்கள் செய்துவிடலாமென்பதில் இப்போது சந்தேகம் ஒன்றுமில்லை.

அப்படி ஆபத்தோ, நிர்ப்பந்தமோ, அவசியமோ ஒன்றுமில்லாமல், குடும்பத்தின் வருங்கால நன்மையை மட்டில், மனதில் காரணமாக வைத்துக் கொண்டு, அக் குடும்பத்திற்குச் சொந்தமாக ஒரு இடத்தில் இருக்கும் ஸ்தாவர சொத்துக்களை ரொக்கத்திற்கு விற்று, அப் பணத்தைக் கொண்டு வேறு இடத்தில் நிலம் வாங்கக் குடும்பத் தலைவருக்கு இந்துச் சட்டத்தில் அதிகாரமுண்டா என்ற பிரச்னைக்கு, இவ் வழக்கில், நீதிபதி அவர்கள் அபிப்பிராயம் சொல்லி இருக்கின்றனர். குடும்ப நன்மையை உத்தேசித்து இவ்விதம் செய்யக் குடும்பத் தலைவருக்கு அதிகாரம் உண்டென்று, நீதிபதி அவர்கள் இவ் வழக்கில் தீர்ப்பளித்திருக்கின்றனர்.

பிரஸ்தாப வழக்கில்—இந்துத் தகப்பன் ஒருவருக்கு நான்கு மைனர் மகன்கள். தகப்பனும் மகன்களும், பிரிபடாத குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். குடும்பத்திற்கு ஏரான சொத்துக்கள் இருந்தன. இச் சொத்துக்களில், ஒரு ஊரில் இருந்த சுமார் மூன்று ஏகர் புஞ்சை நிலங்களை, தகப்பனுனவர் ரூ. 2000க்கு ஒருவருக்கு விற்பனை செய்து, அப் பணத்தைக் கொண்டு வேறு ஊரில் 5 ஏகர் சொச்சம் நஞ்சை நிலங்களைக் குடும்பத்திற்காகப் புதிதாக வாங்கினர்.

மைனர்மகன்கள் நால்வருக்கும் தாயாரானவள் கார்டியனுக இருந்து, தகப்பன் மீதும், தகப்பனிடம் நிலம் வாங்கியவர் மீதும் கோர்ட்டில் தாவா செய்தாள். குடும்பச் சொத்தைத் தகப்பன் விற்கவேண்டிய யாதொரு அவசியமும் இல்லை என்றும், விற்கப்பட்ட சொத்தில் மைனர்களுக்குச் சொந்தமான 5ல் 4 பங்குக்கு, அச் சொத்தை வாங்கியவருக்கு யாதொரு பாத்தியமும் ஏற்படாதென்றும் நிர்ணயம் செய்து டிக்ரி ஏற்பட வேண்டுமென்று அவள் தாவாவில் கேட்டிருந்தாள். ஜில்லா முன்சீப்பானவர் வாதிகளுடைய கட்சி சரி என்று ஏற்றுக்கொண்டு தீர்ப்புச் செய்தார்—அதாவது தகப்பன் குடும்பச் சொத்தை விற்றது செல்லாதெனவும், அது மைனர்களின் பாகத்தைக் கட்டுப்படுத்தாதெனவும் தீர்ப்பளித்தார். இதன் பேரில் ஏற்பட்ட அப்பீலில் சப்ஜட்ஜ் வாதிகளின் வழக்கைத் தள்ளினர். அதாவது தகப்பன் விற்றது மைனர் மகன்களையும் கட்டுப்படுத்துமென அவர் தீர்ப்பளித்தார்.

வாதிகள் சென்னை ஹைகோர்ட்டுக்கு இரண்டாவது அப்பீல் கொடுத்தனர். உயர் நீதிபதி சந்திரா ரெட்டி அவர்களும் வாதிகளுடைய கட்சியை ஏற்றுக்கொள்ளவில்லை. நிர்ப்பந்தமோ ஆபத்தோ ஒன்றுமில்லாவிட்டால் கூட, குடும்ப லாபத்தையும் நன்மையையும் உத்தேசித்துக் குடும்பச் சொத்தை விற்கக் குடும்பத் தலைவனுக்கு உரிமை உண்டென்று நீதிபதி அவர்கள் இது சம்பந்தமான சட்டத்தை விளக்கி இருக்கின்றனர். அதிக வருமானம் கிடைக்காமலிருந்த புஞ்சை நிலங்களை விற்று அத் தொகையைக் கொண்டு வேறு இடத்தில் அதிக வருமானமுள்ள நஞ்சை நிலத்தைத் தகப்பன் வாங்கியது குடும்ப லாபத்தை உத்தேசித்தே என்றும், அப்படி அவர் செய்ய இந்துச் சட்டம் இடமளிக்கிறதென்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். இதே விதம் அபிப்பிராயம் சொல்லப்பட்டிருக்கும் பல நீதிபதிகளின் தீர்ப்புக்களும் குறிப்பிடப்பட்டுப் பின்பற்றப் பட்டிருக்கிறது.

தந்திமூலம் பாகப் பிரிவினை செய்துகொண்டு, உயில் எழுதி வைத்தார்.

[ஆதாரம்:—1953 (1) மதராஸ் லா ஜர்னல்—294.]

பிரிபடாத இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், அக்குடும்பச் சொத்துக்களில், தமக்குள்ள பிரிபடாத பாகத்தை 'உயில்' மூலம் எவருக்கும் கொடுத்துவிட முடியாது என்பதுதான் இந்துச் சட்டம். பிரிபடாத பாகத்தை ஒருவர் மற்றப் பாகஸ்தர்களுடைய சம்மதமில்லாமலே, பிரதிப் பிரயோஜனம் பெற்றுக்கொண்டு விற்றுவிடலாம்; அடமானமும் வைத்துவிடலாம். ஆனால், பிரிபடாத தம் பாகத்தை இந்து எவரும் தான சாசனத்தின் மூலமாகவோ, 'உயில்' மூலமாகவோ கொடுத்துவிட முடியாது.

ஆனால் பாகம் பிரித்துக் கொண்ட ஒருவர் தம்முடைய பாக சொத்துக்களைப் பொறுத்து 'உயில்' எழுதி வைத்தால் அது செல்லும். இந்துச் சட்டப்படி பொதுக் குடும்பத்தைவிட்டு ஒருவர் பிரிந்து கொள்ளுவது மிக மிகச் சுலபமான காரியம். ஒன்றும் செலவுகூட இல்லை. அவ்விதம் பிரிந்துகொள்ள விரும்பும் ஒருவர் மற்றப் பாகஸ்தர்களுக்குத் தம் எண்ணத்தைத் தெரிவித்தாலே போதும். 'நான் இதுமுதல் உங்களுடைய குடும்பத்திலிருந்து பிரிந்து கொண்டேன்'—என்பதுபோல் அவர் மற்றப் பாகஸ்தர்களுக்குத் தெரிவித்த உடனேயே, அவர் ஒரு தனி அந்தஸ்துள்ளவராகி விடுவார். சொத்துக்களை நலம் இளம் சரிக்கட்டிப் பிந்தி எப்பொழுது வேண்டுமானாலும் பிரித்துக் கொள்ளலாம். 'பாகம் பிரிந்தவர்' (Divided Status) என்ற ஹோதாவை அடைய, சொத்துக்களையும் உடனேயே பாகம் போட்டுவிடவேண்டுமென்ற அவசியமில்லை.

ஆபத்தான சந்தர்ப்பங்களில் மாட்டிக்கொண்டவர்களுக்கு இவ்விதம் சட்டம் இருப்பது எவ்வளவு உபயோகமாக இருக்கிறதென்பதை இவ்வழக்கு விளக்கிக் காட்டுகின்றது.

பாலகிருஷ்ணமூர்த்தி என்ற ஒரு இன்ஜினியரும் அவருடைய அண்ணனும் ஒரு பிரிபடாத இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இக்குடும்பத்திற்குப் பொது ஸ்தாவரச் சொத்துக்கள் இருந்தன. பாலகிருஷ்ண மூர்த்திக்கு இந்திரா பாய் என்ற மனைவி மட்டில் உண்டு. குழந்தைகள் இல்லை. இவர் 1947 ஜூலை மாதத்தில் சென்னைக்கு மாற்றப்பட்டார். ஏதோ பிரமாதமான நோய் ஒன்று அவருக்கு ஏற்பட்டது. ஆகஸ்டு முதல் தேதி முதல் இவர் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியிலேயே தங்கி சிகிச்சை செய்துகொண்டார். இனி பிழைக்கமாட்டோம், என்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. தம்முடைய சொத்துக்களைத் தம்முடைய மனைவிக்கே சர்வ சுதந்தரத்துடன் கொடுத்து அவள் பெயருக்கு ஒரு 'உயில்' எழுதி வைக்கவேண்டுமென்று அவர் ஆசைப்பட்டார். அதற்காக வக்கீல்கள் இருவரைக் கலந்தார். இவருடைய ஸ்தாவர சொத்துக்கள் யாவும் பொதுக் குடும்பச் சொத்துக்களே. இன்னும் பொதுக் குடும்பத்திலிருந்து இவர் பிரிந்துகொள்ளவில்லையே. அப்படி இருக்கும்போது அச்சொத்துக்களை இவர் எப்படி உயில் மூலம் தம் மனைவிக்குச் கொடுக்க முடியும்? ஆகையால் உடனே அவர் குடும்பத்திலிருந்து பிரிந்துகொள்ள வேண்டும். பிறகுதான் மனைவிக்கு உயில் எழுதவேண்டும். நோயின் கடுமையை உத்தேசித்தால் இவை எல்லாம் உடனேயே செய்தாகவேண்டும்.

ஆகையால், 4-8-1947 அன்று இரவு 7-30க்கு மணிக்குச் சற்று முன்பு, பாலகிருஷ்ணமூர்த்தியானவர், தம் அண்ணனுக்கு ஒரு தந்தி எழுதினர். அண்ணன் இருந்தது வெகு தொலைக்கு அப்பால். "இதன்மூலம் நான் உங்களிடமிருந்து பிரிந்து கொண்டுவிட்டேன் என்பதைத் தெரிவிக்கிறேன்—நான் ஒரு உயில் எழுதப்போகிறேன்."—என்பதுதான் தந்தி. இத்தந்தி பாரத்தில் நோயாளி 7-30 மணிக்கு முன்பே கையெழுத்துப் போட்டாலும் இத்தந்தியானது தந்தி ஆபீசில் இரவு 8-20 மணிக்குத்தான் தாக்கல் செய்யப்பட்டதாகவும் அங்கிருந்து இரவு 8-32 மணிக்குத்தான் தந்தி அனுப்பப்பட்டதாகவும் பிறகு சாட்சியத்தில் தெரியவந்தது. ஆனால் தந்தி பாரத்தில் பாலகிருஷ்ணமூர்த்தி கையெழுத்துப் போட்டவுடன், மணி 7-30க்கு அவர் தம் மனைவிக்கு 'உயில்' எழுதிவைத்து விட்டார். உயிலின் வாசகம்—"நான் என்னுடைய சகோதரர் வெங்கட சிவப்பிரசாதராவிடமிருந்து பிரிந்து கொண்டேன். என்னுடைய எல்லா ஜங்கம சொத்துக்களையும், ரொக்கம், பாங்கியில் இருக்கும் பணம், இன்ஷ்யூரன்ஸ் தொகைகள், என் பாகத்திற்கான ஸ்தாவர சொத்துக்கள் இவை எல்லாவற்றையும், என் மனைவி இந்திராபாய்க்கு இந்த உயில் மூலம் சர்வ சுதந்தர பாத்தியங்களுடன் கொடுத்துவிட்டேன். .. .."—என்பது தான் உயில். இதில் இரண்டு வக்கீல்களும் இரண்டு டாக்டர்களும் மற்றும் சிலரும் சாட்சி போட்டிருந்தனர். பாலகிருஷ்ணமூர்த்தி 6-8-1947ல் இறந்தார். அதாவது உயில் எழுதிய மறுநாள் போக மறுநாள் இறந்தார்.

இந்த உயில் சம்பந்தமாக விவகாரம் ஏற்பட்டது. உயில் எழுதிவைத்தவருடைய அண்ணன் இது செல்லாதெனக் காட்சியாடினர். அவருடைய கட்சி இதுதான்:—

பாலகிருஷ்ணமூர்த்தி உயிலில் கையெழுத்துப் போட்டபோது அவர் பிரிபடாத குடும்பத்

தைச் சேர்ந்தவரே. எனென்றால் 4-8-1947 தேதியில் அவர் உயில் எழுதியது இரவு 7-30 மணிக்கு. ஆனால் அதற்குப் பின்பு 8-20 மணிக்குத்தான் அவர் அண்ணனுக்குக் கொடுத்த தந்தியானது தந்தி ஆபீசில் கொடுக்கப்பட்டது. தந்தி பாரத்தில் அவர் கைபெழுத்துப் போட்டதானது உயில் எழுதுவதற்கு முன்பே ஆனாலும், தந்தியானது தந்தி ஆபீசில் கொடுக்கப்பட்டால்தான், அவர் தாம் குடும்பத்தை விட்டுப் பிரிந்துவிட்ட தம் எண்ணத்தை அண்ணனுக்குத் தெரிவித்ததாகும். ஆகையால் குடும்பத்தை விட்டுப் பிரிபடாத, அவிபக்த நிலைமையில் அவர் எழுதிய உயில் குடும்பச் சொத்துக்களைப் பாதிக்காது—என்பதுதான் அவருடைய முக்கிய கட்சி. அவர் ஆடிய மற்றக் கட்சிகளை நாம் இங்குக் கவனிக்க வேண்டியதில்லை.

இக்கட்சியை உயர் நீதிபதிகள் ஒப்புக்கொள்ளவில்லை. உயில் எப்பொழுது எழுதப்பட்டாலும், உயில் எழுதியவர் என்று தினம் இறந்தாரோ அன்றுமுதல்தான் அவருடைய உயில் அமுலுக்கு வரும். பாலகிருஷ்ணமூர்த்தி கொடுத்த தந்தியானது, தந்தி ஆபீசில் தாக்கல் செய்யப்பட்டபோது அதாவது 4ஆம் தேதி இரவு 8-30 மணி முதல்தான் அவர் பாகம் பிரிந்துகொண்டதாக வைத்துக்கொண்டாலும், அதற்குப் பிறகுதான் 6ஆம் தேதி பாலகிருஷ்ணமூர்த்தி இறந்து போனார்; இறந்த தேதி முதல்தான் உயில் பேசும். அப்பொழுது அவர் 'விபக்தராகவே இருந்தார். ஆகையால் அவருடைய உயிலானது பொதுக் குடும்பத்தை விட்டு பிரிந்துகொண்ட அவருடைய பாகத்துக்குள்ள சொத்தையும் கட்டுப்படுத்தும்—என்பதுதான். இவ்வழக்கில் பிரதம நீதிபதி ராஜமன்னார் அவர்களும் நீதிபதி வெங்கடராமய்யர் அவர்களும் அளித்த தீர்ப்பு.

இப்பிரச்னை சம்பந்தமாக பல நீதிபதிகள் கொடுத்திருக்கும் அபிப்பிராயங்கள் இத்தீர்ப்பில் பின்பற்றப் பட்டிருக்கின்றன. ஒருவர் 20-1-1885ல் உயில் எழுதிவைத்தார். பிறகு குடும்பத்தை விட்டுப் பாகம் பிரிந்துகொண்டார். இவர் 16-10-1899ல் தான் இறந்தார். உயில் எழுதும்போது இவர் பிரிபடாத குடும்ப அங்கத்தினராக இருந்தமையால் உயில் செல்லாதெனக் கட்சி சொல்லப்பட்டது. அலகாபாத் ஹைகோர்ட் இதை ஒப்புக்கொள்ளவில்லை. உயில் எழுதியவர் இறந்தபோது அவர் பாகம் பிரிந்து கொண்டவரா அல்லவா என்றுதான் கவனிக்க வேண்டுமென்று நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். (29 அலகாபாத் — 82.)

பிரஸ்தாப வழக்கில் வேறு ஒரு கட்சியும் சொல்லப்பட்டது. பாலகிருஷ்ணமூர்த்தி 4-8-1947 தினம் இரவு 8-30 மணிக்குக் கொடுத்த தந்தியானது அவர் 6-8-1947ல் இறந்து போவதற்கு முன்பே அவருடைய அண்ணன் கைக்குக் கிடைத்துவிட்டதாக யாதொரு ருசுவுமில்லை; தந்தியானது அண்ணனிடம் சேர்ந்த நேரம் முதல்தான் தந்தி கொடுத்தவர் பாகம் பிரிந்ததாக ஏற்படும்; ஆகையால் அவர் இறப்பதற்கு முன்பே இத்தந்தியானது அண்ணனிடம் சேர்க்கப்பட்டதென்று ருசு இல்லாத நிலைமையில், பாகம் பிரிந்ததாக ஏற்படாது—என்பது ஒரு கட்சி. இதையும் நீதிபதிகள் ஏற்கவில்லை. பல நீதிபதிகள் வேறு விதமாக அபிப்பிராயப்பட்டிருப்பது இத்தீர்ப்பில் எடுத்துக் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு வழக்கில், தகப்பனும் மகனும் பிரிபடாத குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். 3-8-1926 தினம் தகப்பன், தம் மகனுக்கு ஒரு ரிஜிஸ்டர் நோட்டீசு அனுப்பினார்; அதாவது தாம் குடும்பத்தை விட்டுப் பிரிந்துகொண்டதாக. 4-8-1926 (மறுநாள்) தகப்பன் உயில் எழுதி, தம் வீதச் சொத்துக்களை வேறு யாருக்கோ கொடுத்துவிட்டார். 5-8-1926 தினம் தகப்பன் இறந்தார். பிறகு 9-8-1926 அன்றுதான் ரிஜிஸ்டர் நோட்டீசானது மகனுக்குக் கிடைத்தது. தகப்பன் பிரிந்து போனது எந்தத் தேதியில் என்ற பிரச்னை ஏற்பட்டது. மகனிடம் நோட்டீசு கிடைத்த தேதியில்தான் தகப்பன் பிரிந்து போனதாகச் சட்டத்தில் ஏற்பட்டால், அதற்கு முன்பே தகப்பன் இறந்துவிட்டபடியால், அவர் எழுதிய உயிலானது செல்லாது. ஆனால் நீதிபதி வரதாச்சாரியார் அவர்கள் இது அவசியமில்லை என அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். தாம் பிரிந்துகொண்ட எண்ணத்தைத் தகப்பன் நோட்டீசு மூலம் அனுப்பியதே போதும்! அந்நோட்டீசானது மகனுடைய கைக்குக் கிடைத்த பிறகுதான் பாகம் ஏற்படுமென்பது இல்லை என்பதே அந்நீதிபதியின் அபிப்பிராயம். (1938 (1) மதராஸ் லா ஜர்னல்—45.) வேறு ஒரு தீர்ப்பில் (1949 (2) மதராஸ் லா ஜர்னல் 268) நோட்டீசு மூலம் தெரிவிப்பது கூட அவசியமில்லை; ஒருவர் சந்தேகமில்லாமல் வியக்தமாகத் தாம் தம்முடைய குடும்பத்தை விட்டுப் பிரிந்து போய்விட்டதாகப் பிரகடனம் செய்தாலே பிரிந்த அந்தஸ்தை அடைந்து விடுகிறார் என்று நீதிபதி விசுவநாத சாஸ்திரி அவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர்.

பிரஸ்தாப வழக்கிலும், தந்தி கொடுக்கப்பட்டஉடனேயே, பாலகிருஷ்ணமூர்த்தி பாகம் பிரிந்த அந்தஸ்தை அடைந்துவிட்டாரென நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

கோயில் நிலங்களை அனுபவித்து வரும் அர்ச்சகர்கள்—சென்னை ஹைகோர்ட் தீர்ப்பு.

[ஆதாரம்:—1953—(1) மதராஸ் லா ஜர்னல்—284.]

கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைக் கோயில் அர்ச்சகர், அல்லது பூசாரியே அனுபவித்துக் கொண்டு அவற்றின் வரும்படிகளிலிருந்து கோயில் பூஜைச் செலவுகளையும் செய்து கொண்டு தம்முடைய ஊதியத்தையும் எடுத்துக் கொள்ளும் வழக்கம் பல கோயில்களில், முக்கியமாகச் சிறிய கோயில்களில் இருந்துவருகிறது. அப்படி இருப்பதில் சட்டரீதியாக ஒன்றும் தவறு இல்லை என்பதை இத்தீர்ப்பு விளக்கிக் காண்பிக்கின்றது.

பிரஸ்தாப வழக்கின் விபரம்:—குண்டூர் ஜில்லாவில் ஒரு கிராமத்தில் ஸ்ரீ மல்லேசுவரஸ்வாமி கோயில் என்ற ஒரு கோயில் இருக்கிறது. அக்கோயிலுக்கு சென்னை இந்து மத ஸ்தாபன பரிபாலன போர்ட்டார் (எண்டௌமெண்டு போர்டு) ஒரு நிர்வாக அதிகாரியை நியமித்தனர். அக்கோயிலின் நிலங்களில் 20 ஏகர் 42 செண்டு நிலங்கள் அக்கோயில் அர்ச்சகர்களின் வசம் இருந்தன. இந்நிலங்களை அவர்கள் தம் வசம் ஒப்புவித்து விட வேண்டுமென்று கோரி, நிர்வாக அதிகாரியானவர் ஜில்லா கோர்ட்டுக்கு மனுச் செய்தார். இம்மனு முடிவடைவதற்கு முன்பே அர்ச்சகர்கள், சப்கோர்ட்டில் ஒரு அசல் தாவா போட்டனர். அதாவது இந்நிலங்களை அனுபவித்து வர, அர்ச்சகர்களுக்கு உரிமை உண்டென்றும், அவற்றைத் தங்களிடமிருந்து பிடுங்கி விட, நிர்வாக அதிகாரிக்கு உரிமை இல்லை என்றும் ஸ்தாபிப்பதற்காகவே இத்தாவா செய்தனர். இத்தாவா முடிவதற்குள் ஜில்லா கோர்ட் மனுவின் பேரில் தீர்ப்பு ஏற்பட்டது. அர்ச்சகர்கள் வசமிருந்த நிலங்களை, கோயிலின் நிர்வாக அதிகாரியிடம் அவர்கள் ஒப்படைத்து விட வேண்டு மென்பதே இத்தீர்ப்பு. இத்தீர்ப்புக்குப் பிறகு அர்ச்சகர்கள் சப்கோர்ட்டில் தாக்கல் செய்த தாவாவைத் திருத்திக் கொண்டனர். அதாவது ஜில்லா கோர்ட்டின் மேற்கண்ட உத்தரவை ரத்துச் செய்யும்படியும் ஒரு பிரார்த்தனையைத் தங்கள் அசல் தாவாவில் சேர்த்துக் கொண்டனர். இத்தாவாவும் அர்ச்சகர்களுக்கு விரோதமாகப் போயிற்று. நிலங்கள் கோயிலுக்கே கொடுக்கப்பட்டவை என்றும், அவை அர்ச்சகர்களுக்குக் கொடுக்கப்பட்டவை அல்ல என்றும், கோயிலின் பாத்தியத்திற்கு விரோதமாக அர்ச்சகர்கள் பாத்தியம் கொண்டாட முடியாதென்றும், சப்ஜட்ஜ் அபிப்பிராயப்பட்டு, அர்ச்சகர்களின் தாவாவும் தள்ளப்பட்டது. அத்தீர்ப்பின் பேரில் அர்ச்சகர்கள் சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர்.

சட்டப்படி நிலங்கள் எல்லாம் கோயிலுக்குத்தான் பாத்தியமுள்ளவை என்பது ஏற்பட்டாலும் பொதுமக்களின் நன்மையையும், கோயில்களில் பூஜை சரிவர நடக்க வேண்டு மென்பதையும் உத்தேசித்து, தினசரி கோயில் பூஜைச் செலவுகளுக்குப் பதிலாகவும் தங்களுடைய ஊதியத்திற்குப் பதிலாகவும் கோயில் நிலங்களின் வரும்படிகளை அனுபவித்துக் கொண்டு, கோயிலில் தினசரி பூஜை நைவேத்தியங்களை நடத்திக் கொண்டு வரும் பரம்பரை அர்ச்சகர்களிடமிருந்து அந்நிலங்களை எடுத்து விடுவது விரும்பத்தக்கதல்ல என்று உயர் நீதிபதிகள் பல சமீப காலத் தீர்ப்புக்களில் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். அவ்வித அபிப்பிராயங்களைத் தழுவி இவ்வழக்கிலும் நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். ஆனால் குறிப்பிட்ட ஒரு கோயில் சம்பந்தப் பட்ட வரையில் மேற்கண்ட செலவுகளுக்காக எவ்வளவு நிலங்கள் அர்ச்சகர்கள் வசம் இருக்கலாமென்பது அந்தந்தக் கோயில்களின் நிலைமையைக் கொண்டு நிர்ணயம் செய்யப்பட வேண்டிய விஷய மென்று நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். பிரஸ்தாபக் கோயில் சம்பந்தப்பட்ட வரையில், 6 ஏகர் 29 செண்டு விஸ்தீர்ணமுள்ள ஸ்தலத்தை அர்ச்சகர்கள் தங்களுடைய ஊதியத்திற்குப் பதிலாக அனுபவித்து வரலாமென்றும், 4 ஏகர் 81 செண்டு விஸ்தீர்ணமுள்ள மற்றொரு ஸ்தலத்தையும் அர்ச்சகர்களே அனுபவித்துக் கொண்டு அதன் வரும்படியிலிருந்து தினசரி பூஜைக்கான செலவுகளைச் செய்து வரவேண்டு மென்றும், பாக்கி இருக்கும் நிலத்தைக் கோயில் நிர்வாக அதிகாரியிடமே அவர்கள் விட்டு விடவேண்டு மென்றும் நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். அர்ச்சகர்களும் அவர்களுடைய வார்சுகளும் கோயிலின் வழக்கப்படி தினசரி பூஜை நைவேத்தியங்களைச் சரிவரவும் நம்பிக்கையாகவும் தாங்களே செலவு செய்து நடத்திவரும் வரை, அவர்கள் இந்நிலங்களை அனுபவித்து வரலாமென்றும், நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். அவ்விதம் அர்ச்சகர்கள் செய்யத் தவறினால், அந்நிலங்களைக் கோயில் நிர்வாக அதிகாரி கைப்பற்றி, பூஜை நைவேத்தியங்களுக்கு வேறு ஏற்பாடு செய்ய உரிமை உண்டென்றும் இத்தீர்ப்பிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நிலங்களைப் பராதீனம் செய்ய அர்ச்சகர்களுக்குப் பாத்தியமில்லை என்பதையும் நீதிபதிகள் சுட்டிக் காண்பித்திருக்கின்றனர்.

கணவன் சொத்தின் வருமானம், ஜீவனத்திற்குப் போதவில்லை என்று இந்து விதவை எல்லாச் சொத்துக்களையும் விற்றுவிட முடியுமா?

[ஆதாரம்:—1953 ஆல் இந்தியா ரிப்போர்ட்டர்—மதராஸ்—238.]

இந்துச் சட்டப்படி, கணவனுடைய சொத்துக்களை வார்சு முறைமையில் அனுபவித்து வரும் அவருடைய விதவையானவள், அச்சொத்துக்களின் வரும்படியை மட்டில்தான் தன்னுடைய ஆயுள்வரை அனுபவித்து வரலாம். ஆனாலும் சில விசேஷ சந்தர்ப்பங்களில் மட்டில் அவள் அச்சொத்தைப் பொறுத்து விற்பனை, அடமானம் முதலிய பாதீனங்களும் செய்யலாம். உதாரணமாகத் தன்னுடைய கணவன் பட்ட கடன்களைத் தீர்க்கப் போதுமான சொத்துக்களை, விதவை விற்றுவிடலாம்; அச்சொத்தின் வருமானம் தன்னுடைய ஜீவனத்திற்கே போதாமலிருந்தாலும், ஜீவனம் செய்யத் தேவையான சொத்துக்களையும் அவ்விதவை விற்றுவிடலாம்.

பிரஸ்தாப வழக்கில் விதவையானவள், தான், புருடனுடைய வார்சாக அடைந்த எல்லா ஸ்தாவர சொத்துக்களையும் ரூ. 4800க்கு ஒரே தடவையாக விற்றுவிட்டாள். இதில் ரூ. 1440 மட்டில் கடனுக்காகக் கொடுக்கப்பட்டது. பாக்கித் தொகையை தன்னுடைய ஜீவனத்திற்காக அவ்வப்பொழுது செலவு செய்யலாம் என்ற எண்ணத்துடன் அவருடைய சகோதரரிடம் கொடுத்து வைத்திருந்தாள்.

இப்படிச் செய்ய விதவைக்கு சட்டப்படி அதிகாரம் இல்லை என்று சென்னை உயர்நீதிபதி ராகவராவ் அவர்கள் இவ்வழக்கில் தீர்ப்பளித்தனர். அவ்விதவை வயதான கிழவி என்றும், பார்சவாயுவால் பீடிக்கப்பட்டிருக்கிறாள் என்றும், சொத்தின் வருமானமானது அவளுடைய ஜீவனச் செலவுகளுக்குப் போதவில்லையாகையால் வருடா வருடம் அச்சொத்தின் ஒரு பாகத்தை அவள் விற்றுக்கொண்டேதான் போகவேண்டுமென்றும், அப்படிச்செய்ய அவளுக்குச் சட்டப்படி உரிமை இருக்கும்போது, ஒரே தடவையில் அவள் எல்லாச் சொத்துக்களையும் விற்று, தன்னுடைய எதிர்கால ஜீவனத்திற்கு எடுத்துக் கொள்ளும்படி ஒரு நிதியை அவள் ஏற்படுத்திக் கொள்ளவும் அவளுக்கு உரிமை இருப்பதாக, அவளுக்காகவும் அவளிடம் சொத்தைக் கிரயம் பெற்றவருக்காகவும் ஹைகோர்ட்டில் வாதாடப்பட்டது. இதை உயர்நீதிபதி அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவ்வப்பொழுது தன்னுடைய ஜீவனத்திற்குத் தேவையான சொத்துக்களை மட்டில்தான், விதவை விற்றுக் கொள்ளலாமே ஒழிய, ஜாடா ஸ்தாவர சொத்துக்களையும் ஒரே தடவையில் பணமாகச் செய்து வைத்துக்கொள்ள இந்து விதவைக்கு அதிகாரம் இல்லை என உயர்நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

வருமானவரி வழக்கு—ஒரே நபர் இரண்டு வெவ்வேறு வகை வியாபாரங்கள் நடத்தினால், ஒன்றில் ஏற்படும் நஷ்டத்தை மற்றொன்றில் கிடைக்கும் லாபத்தில் ஈடுசெய்து கொள்ள முடியுமா?

[ஆதாரம்:—1953 ஆல் இந்தியா ரிப்போர்ட்டர்—கல்கத்தா—127.]

ஒரு கம்பெனியானது 1944—45 வருடத்தில் செலுலாய்ட் சரக்கில் வியாபாரம் செய்தது. அதில் நஷ்டம் ஏற்பட்டது. அவ்வியாபாரத்தையே அக்கம்பெனி வேறு ஒருவருக்கு விற்றுவிட்டது. பிறகு 1945—46ஆம் வருடத்தில் அக்கம்பெனி வேறு புதிய தொழில் ஒன்று ஆரம்பித்து நடத்தியது. அதாவது 1945—46இல் இக்கம்பெனியானது கமிஷன் ஏஜண்டுகளாகவும், பங்கு வியாபாரிகளாகவும் தொழில் செய்து வந்தது. இதில் அக்கம்பெனிக்கு லாபம் கிடைத்தது.

'இன்கம்டாக்ஸ்' கணக்குக் கொடுக்கும்போது இப்புதிய தொழிலில் அக்கம்பெனிக்கு ஏற்பட்ட லாபத்தில் முந்திய வருடத்தில் அதற்கு, செலுலாயிட் வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்துகொண்டு வருமானக் கணக்குக் கொடுத்தனர்.

அப்படிச் செய்ய முடியாதென்று கல்கத்தா ஹைகோர்ட்டார் அபிப்பிராயம் கொடுத்தனர். வருமான வரிச் சட்டத்தின் செக்ஷன் 24 (2)இன்படி ஒரே வியாபாரத்தில் ஏற்படும் நஷ்டத்தைத்தான் அதில் ஏற்படும் லாபத்தில் ஈடு செய்து கொள்ளலாமென்று இருக்கிறதே ஒழிய, ஒரே நபர் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத வெவ்வேறு வகையான வியாபாரம் அல்லது தொழில் செய்து வந்தால், ஒன்றில் ஏற்படும் நஷ்டத்தை வேறு ஒன்றில் ஏற்படும் லாபத்தில் ஈடு செய்யக்கூடுமென்று இல்லை என்று நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

பிரிபடாத இந்துக் குடும்பத்தில் ஒரு பாகஸ்தருடைய பாத்தியம், கோர்ட் ஏலத்தில் போய் விட்டது. அவருக்கு மறுபடியும் குடும்பச் சொத்தில் பாகம் உண்டா?

[ஆதாரம்:–1953—ஆல் இந்தியா ரிபோர்ட்டர் மதராஸ்—240]

பெத்தி செட்டியார் என்பவருக்கு ஐந்து மகன்கள். தகப்பனும் மகன்களும் பாகம் பிரிபடாத இந்துக் குடும்பமாகவே இருந்து வந்தனர். இக்குடும்பத்திற்கு 76 ஏகர் நிலமும், இரண்டு வீடும், சில காலி மனைகளும் உண்டு. மகன்களில் ஒருவரான கரியன் செட்டியார் என்பவர் மீது, அவருக்குக் கடன் கொடுத்தவர் ஒருவர் 1929இல் ஸ்மால்காஸ் தாவா ஒன்று செய்து டிக்ரி பெற்றிருந்தார். இந்த டிக்ரியை நிறைவேற்றி அவர் கரியன் செட்டியாருடைய பாகத்தை, (அதாவது பொதுக் குடும்பச் சொத்துக்களில் கரியன் செட்டியாருக்குப் பாத்தியமுள்ள பிரிபடாத வீதத்தை) ஜப்தி செய்து, கோர்ட் ஏலத்துக்குக் கொண்டுவந்து, அதைத் தாமே ஏலத்திலும் எடுத்து விட்டார்; அச்சொத்தை ஒப்படைப்பாகவும் கோர்ட் மூலம் அவர் வசப்படுத்திக் கொண்டார். ஆனால் குடும்பத் தலைவரான பெத்தி செட்டியார் 13-9-1933 இல் மேற்கண்ட ஏலதாரிடம் ரூ. 300 கொடுத்து அவர் ஏலமெடுத்த சொத்தில் இனி அவருக்குப் பாத்தியம் இல்லை என்று ஒரு விடுதலைப் பத்திரம் வாங்கி விட்டார். அதாவது ஏல சொத்துக்களின் பாத்தியம் மறுபடியும் அக்குடும்பத்துக்கே வந்து விட்டது. பெத்தி செட்டியார் (தகப்பன்) 1937 இல் இறந்து விட்டார். மகன்களில் ஒருவர் தகப்பனுக்கு முன்பே இறந்து விட்டார். கரியன் செட்டியார் உள்பட மற்ற மகன்களும், இறந்த மகனின் மூன்று மகன்களும் ஒரே குடும்பமாகவே வசித்து வந்தனர். சிலகாலம் கழித்துச் சகோதரர்களிடையே சச்சரவுகள் வரவே, குடும்பச் சொத்துக்களில் கரியன் செட்டியாருக்குள்ள பாகம் ஏற்கனவே கோர்ட் ஏலத்தில் போய் விட்டபடியால், கரியன் செட்டியாருக்கு மறுபடியும் பாகம் கிடையாதென்று மற்றச் சகோதரர்கள் அவருக்குப் பாகம் கொடுக்க மறுத்தனர். அதன் பேரில் கரியன் செட்டியார் தமக்குக் குடும்பச் சொத்துக்களில் 5 இல் 1 பாகம் கிடைக்க வேண்டுமென்று மற்றச் சகோதரர்களின் மீதும், இறந்த சகோதரரின் மகன்கள் மீதும் கோர்ட்டில் பாக வியாஜ்யம் தொடர்ந்தார். மற்றச் சகோதரர்கள் இவருக்குப் பாகம் கிடையாதெனவும், இவரை நீக்கித் தாங்கள் மட்டில் 1934 லேயே பாகம் செய்து கொண்டு விட்டதாகவும் கட்சியாடினர்.

வாதிக்குப் பாகம் உண்டா? அப்படியானால் குடும்பச் சொத்துக்களில் எவ்வளவு பாகம் அவருக்குக் கிடைக்கும்? இப்பிரச்னைகள் தான் இவ்வழக்கில் ஏற்பட்டன.

முதல் கோர்ட்டாகிய டிஸ்டிரிக்ட் முன்சீப்பின் தீர்ப்பு:—வாதிக்குக் குடும்பச் சொத்தில் 25 இல் 1 பங்கு தான் வீதம் உண்டு. ஏனென்றால் முதலில் வாதிக்குச் சொந்தமாக இருந்த 5 இல் 1 பாகமானது கோர்ட் ஏலத்தில் போய் விட்டது. இதைத் தகப்பன் மட்டில் தான் விடுதலை மூலம் ஏலதாரிடமிருந்து திரும்ப வாங்கினார். அதாவது திரும்ப வாங்கப்பட்ட இச்சொத்துப் பாத்தியமானது, தகப்பனுக்கு மட்டில் சொந்தமான தனிச் சொத்தாகும். தகப்பன் இறந்த பிறகு இதற்கு வாதி உள்பட அவருடைய ஐந்து மகன்களுக்கும் பாகமுண்டு. அதாவது வாதிக்கு மொத்தக் குடும்பச் சொத்தில் 5 இல் ஒரு பாகத்தில் 5 இல் ஒரு பாகம்—அதாவது 25 இல் ஒரு பாகம் தான் உண்டு.

[குறிப்பு:—வாதியின் பாத்தியம் ஏலம் போனபோது 6 இல் 1 பாகம். இதைத் தான் தகப்பன் திரும்ப வாங்கியதாக இருந்தால், இதில் 5 இல் 1 அதாவது மொத்தத்தில் 30 இல் 1 பங்குதான் வாதிக்கு வரும்.—ஆசிரியர். "வக்கீல்"]

வாதி இத்தீர்ப்பின் பேரில் ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

ஜில்லா ஜட்ஜின் தீர்ப்பு:—தகப்பன் பெத்தி செட்டியானவர் ஏலம் போன வாதியின் பாகத்தைத் திரும்ப வாங்கியது, அக்குடும்பத்திற்காகவே. அது மறுபடியும் குடும்பப் பொதுச் சொத்தாகி விட்டது. வாதியும் அக்குடும்பத்தைச் சேர்ந்தவரே. வாதிக்கு மொத்தக் குடும்பச் சொத்துக்களில் 5 இல் 1 பாகம் உண்டு என்பது தான் ஜில்லா ஜட்ஜின் தீர்ப்பு.

இத் தீர்ப்பின் பேரில் மற்றச் சகோதரர்கள் சென்னை ஹைகோர்ட்டுக்கு இரண்டாவது அப்பீல் செய்தனர்.

ஹைகோர்ட் தீர்ப்பு:—வாதிக்குக் குடும்ப சொத்துக்களில் இருந்த பாத்தியமானது கோர்ட் ஏலத்தில் போய் விட்டாலும், வாதியானவர் அக் குடும்பத்திலேயே, பிரிபடாத நிலைமையிலேயே எப்போதும் போலவே, இருந்து வந்திருக்கிறார். அதாவது அவருடைய சொத்துப் பாத்தியம் ஏலம் போய் விட்டதால் அவர் குடும்பத்தை விட்டுப் பிரிந்து போய் விட்டதாக ஏற்படாது. கோர்ட் ஏலத்திற்குப் பின்பும், வாதி பிரிபடாத இந்துக் குடும்பத்தின் ஓர் அங்கத்தினராகவே தான் இருந்திருக்கிறார். ஏலமெடுத்தவரிடம் சொத்தைத் திரும்ப வாங்கியதானது, இக் குடும்பத்திற்காகவே தான் என்று ஏற்படுமே ஒழிய, அப்படி வாங்கியது தகப்பனுடைய தனி நன்மைக்காக மட்டுமென்றோ, மற்றச் சகோதரர்களுடைய நன்மைக்காக மட்டுமென்றோ, ஏற்படாது. ஆகையால் வாதிக்கு மொத்தக் குடும்பச் சொத்துக்களில் 5 இல் 1 பங்கு உண்டு. ஆனால் ஏலம் போன பங்கைத் திரும்ப வாங்குவதற்காகக் கொடுக்கப்பட்ட ரூ. 300 ம் வாதி தனிச் சொந்த முறைமையில் பட்ட கடனுக்காகவே கொடுக்கப் பட்டிருப்பதால், இத்தொகையை அவருடைய வீதத்தில் கழித்துக் கொள்ள வேண்டியது. அதாவது குடும்பச் சொத்தில் வாதியின் பாகத்திற்காக என்றே, ஏற்கனவே ரூ. 300 கொடுக்கப் பட்டு விட்டது போலப் பாவித்து வாதியின் 5 இல் 1 பாகத்திலிருந்து இத் தொகை ரூ 300 யும் கழித்துக் கொள்ள வேண்டும். இது தான் ஹைகோர்ட்டாரின் தீர்ப்பு.

இது 37 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன், மலேயா, இந்தோ - சைனா முதலிய நாடுகளில் கோடிக்கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து நற்கியாதியுடன் தங்க மெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றது.

எல்லாவித படை, சொறிசிரங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுகடி, புழுக்கடி எச்சிற்றழும்பு, கருநிறமுள்ள தடிப்பு, மேகப்படை முதலிய தோல் வியாதிகளை உடனே குணப்படுத்தும்.

பெரிய சைஸ் பாட்டில் ஒன்று அணா 12.
சிறிய ,, ,, ,, அணா 6.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—

ஜெயரசம் டிப்போ,
அய்யம்பேட்டை S. Ry.

சென்னை கிராமப் பஞ்சாயத்து சட்டம் — 1950

[The Madras Village Panchayats Act—1950. 1950-ஆம் வருடத்திய 10-ஆவது சென்னைச் சட்டம். சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. 15—7—50-ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 1—8—1950 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டது. 1—4—1951 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. பஞ்சாயத்துச் சட்டம், அது சம்பந்தமான விதிகள், சர்க்கார் அறிக்கைகள் முதலியவைகள் எல்லாவற்றையும் சேர்த்து 1952 பிப்ரவரி மாத "வக்கீல்" இதழ் முதல் தொடர்ச்சியாகவும் விவரமாகவும் விளக்கம் செய்யப்பட்டு வருகிறது.]

சென்ற மாத இதழில், ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒவ்வொரு வருடமும் அடுத்த வருடத்தில் அப் பஞ்சாயத்துக்கு வரக்கூடிய உத்தேச வருமானங்களையும் அப் பஞ்சாயத்து, செலவு செய்ய வேண்டிய உத்தேசச் செலவு இனங்களையும் கண்டு, 'பட்ஜெட்' என்ற ஒரு உத்தேச வரவு செலவுத் திட்டம் தயார் செய்யவேண்டுமென்பதும்; இதை யார் எப்படித் தயார் செய்வது, யாருடைய அங்கீகாரத்தைப் பெறுவது முதலிய விஷயங்களைப்பற்றிய விதிகளும் விவரமாய் விளக்கப்பட்டன. அடுத்தபடியாக, பஞ்சாயத்துக் கணக்குகளைத் தணிக்கை செய்வது சம்பந்தமாக பஞ்சாயத்துச் சட்டத்திலிருக்கும் ஷரத்துக்களையும் மற்ற ஷரத்துக்களையும் கவனிப்போம்.]

'ஆடிடர்கள்' என்ற தணிக்கை உத்தியோகஸ்தர்களை நியமிப்பது

செக்ஷன் 74

(1) பஞ்சாயத்து நிதியின் வரவு செலவுக் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக 'ஆடிடர்கள்' என்ற தணிக்கை உத்தியோகஸ்தர்களைச் சர்க்கார் நியமிப்பார்கள். அவ்விதம் நியமிக்கப்படும் 'ஆடிடர்கள்' குற்றங்களைப் பற்றிய சட்டமாகிய இந்தியன் பீனல்கோடு சட்டத்தின் செக்ஷன் 21இல் கண்டபடி, 'சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக' பாவிக்கப்படுவார்கள்.

(2) அவ்விதம் நியமிக்கப்படும் 'ஆடிடர்'களுடைய சம்பளம், அலவன்சு, முதலியவைகளுக்கும் சரி, பஞ்சாயத்துக் கணக்குகளைத் தணிக்கை செய்வதில் ஏற்படக்கூடிய வேறு செலவுகளுக்கும் சரி, பஞ்சாயத்துக்களிடமிருந்து சர்க்கார் எவ்வித சகாயத் தொகைகளையும் வசூல் செய்யக்கூடாது.

சர்க்கார் அல்லது வேறு ஸ்தல ஸ்தாபனங்கள் செய்யும் செலவுகளுக்குப் பண உதவி செய்ய பஞ்சாயத்துக்கு அதிகாரமுண்டு.

செக்ஷன் 75

சர்க்காரோ அல்லது வேறு பஞ்சாயத்து, அல்லது ஜில்லா போர்டு, அல்லது வேறு ஸ்தல ஸ்தாபனமோ செய்யும் செலவுகள், இச் சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட செலவு இனங்களாக இருந்து, அச் செலவினால் ஒரு பஞ்சாயத்தில் வசிப்பவர்களுக்கும் நன்மை ஏற்பட்டால் அப் பஞ்சாயத்தானது, இன்ஸ்பெக்டருடைய சம்மதத்தைப் பெற்று, அவ்விதச் செலவுகளுக்காகப் பண உதவி செய்யலாம்; ஒரு பஞ்சாயத்தானது அவ்விதச் செலவுகளுக்காகப் பண உதவி செய்ய வேண்டுமென்று உத்தரவிடவும் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரம் உண்டு.

பஞ்சாயத்துக்குச் சர்க்கார் கொடுக்கும் கடன் தொகைகளையும் முன் பணங்களையும் வசூல் செய்வது பற்றி.

(1) 1914ஆம் வருடத்திய ஸ்தல ஸ்தாபன சபைகளுக்குக் கடன் கொடுப்பது பற்றிய சட்டத்தில் எப்படி இருந்தபோதிலும், சர்க்காருக்குக் கீழே கண்டபடி அதிகாரங்கள் உண்டு. அவையாவன:—(a) சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கடன்களுக்காகக் கொடுக்கவேண்டிய தொகைகள் தவிர, பஞ்சாயத்து நிதியிலிருந்து செய்யக்கூடிய வேறு செலவுகள் செய்வதற்கு முந்தியே, அப்பஞ்சாயத்தானது சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய கடன் தொகைகளையும் முன் பணங்களையும் (அட்வான்சுகளையும்) முன்னதாகவே கொடுத்துவிடும்படி, அப்பஞ்சாயத்துத் தொகை யாரிடமிருக்கிறதோ அவருக்கு உத்தரவிட சர்க்காருக்கு அதிகாரமுண்டு. (b) அவ்விதமான கடன் தொகைகளையும் முன் பணங்களையும் வசூல் செய்யக் கோர்ட்டில் தாவா செய்யவும் சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

(2) மேலே உட்பிரிவு 1 (a) இன்படி எந்த நபருக்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறதோ, அவர் அவ்வுத்தரவில் கண்டபடி செய்ய வேண்டியது அவருடைய கடமையாகும்.

பொதுஜன பந்தோபஸ்து, வசதி, ஆரோக்கியம் பற்றிய ஷரத்துக்கள்.

ஜல வசதிகள் எல்லாம் பஞ்சாயத்துக்கே சொந்தமானவை.

செக்ஷன் 77

(1) கீழே கண்ட ஜல வசதிகள் எல்லாம் பஞ்சாயத்தின் சொத்துக்களாகும்; அவை பஞ்சாயத்தின் நிர்வாகத்திற்கு உட்பட்டவையாகும். அவையாவன:— பொதுத் தண்ணீர் கால்வாய்கள், ஊற்றுகள், ரிசர்வாயர்கள், குளங்கள், நீர்த் தொட்டிகள், கிணறுகள், நிலக் குழாய்கள், மற்ற ஜல வசதிகள் பொது மக்களுக்கு அனுபோக பாத்தியம் ஏற்படும் அளவுக்கு இவைகள் நீண்ட காலமாக உபயோகிக்கப்பட்டு வந்திருந்தாலும், அவைகளும் மேற்கண்டபடி பஞ்சாயத்தின் சொத்தாகிவிடும். இவ்வித ஜல வசதிகள் இச்சட்டம் அமுலுக்கு வரும்போது இருந்திருந்தாலும் சரி, பிறகு ஏற்படுத்தப்பட்டோ அல்லது கட்டப்பட்டோ இருந்தாலும் சரி, இவைகள் பஞ்சாயத்தின் செலவில் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் அல்லது கட்டப்பட்டிருந்தாலும் சரி, வேறு விதமாக இருந்தாலும் சரி இவை எல்லாம் மேற்கண்டபடி பஞ்சாயத்தின் சொத்தாகும். மேலும், மேற்கண்ட ஜல வசதிகளைச் சேர்ந்ததாக அமைந்திருக்கும் நிலங்களும், ஒருவருடைய சொந்த சொத்தாக இல்லாமலிருந்தால், அவைகளும் பஞ்சாயத்தின் சொத்தாகும். ஆனால், நீர்ப்பாசன சம்பந்தமான ஜல வசதிகளுக்கும் அவைகளைச் சேர்ந்த பக்கத்து நிலங்களுக்கும் இந்த ஷரத்து பொருந்தாது.

(2) மேற்கண்ட ஜல வசதிகளைப்பற்றி, பஞ்சாயத்துக்குள்ள அதிகாரங்கள் எம்மட்டு என்பதைப் பற்றி வரையறுத்தும் அது சம்பந்தமாக நிபந்தனைகள் ஏற்படுத்தியும், அறிக்கைகள் பிறப்பிக்கச் சர்க்காருக்கு அதிகாரமுண்டு. அல்லது இவைகளின் நிர்வாகத்தைச் சர்க்காரே எடுத்துக் கொள்ளவும் அதிகாரமுண்டு; ஆனால் அப்படிச் செய்வதற்கு முன்பு இது விஷயத்தை பஞ்சாயத்துக்குத் தெரிவித்துப் பஞ்சாயத்தின் ஆட்சேபனைகள் ஏதாவது இருந்தால், அவைகளையும் சரியாகக் கவனித்த பிறகே தான் சர்க்கார் மேற்கண்டபடி தாங்களே நிர்வாகத்தை எடுத்துக்கொள்ளலாம்.

கோயில், மடங்கள், மசூதி முதலியவர்களிடமிருந்து, சுகாதார ஏற்பாடுகளுக்காகப் பண உதவி கேட்கலாம்

செக்ஷன் 78

ஒரு பஞ்சாயத்து எல்லைக்குள்ளோ அருகிலோ இருக்கும் மசூதி, கோயில், மடம் அல்லது வேறு ஆலயங்கள் இருப்பதாலோ, அல்லது சந்தைகூடும் இடமோ, உற்சவம் நடக்கும் இடமோ அங்கே இருப்பதாலோ, வருடம் பூராவுமோ அல்லது குறிப்பிட்ட காலங்களிலோ ஏராளமான ஜனங்கள் கூடுவதாக இருந்தால்,

அங்குப் பொதுச் சுகாதாரத்திற்கும், பந்தோபஸ்துக்கும், சௌக்கியத்திற்கும் அவசியமான ஏற்பாடுகளை நிரந்தரமாகவோ, தாற்காலிகமாகவோ பஞ்சாயத்தே செய்யவேண்டும். ஆனால் மேற்கண்ட ஸ்தாபனங்களின் தர்மகர்த்தாக்களையோ, நிர்வாகிகளையோ கலந்துகொண்டு, அவர்கள் வருடா வருடமோ, ஒரே தடவையிலோ அப் பஞ்சாயத்து நிதிக்காக எவ்வளவு பணவுதவி செய்ய வேண்டுமென்பதை நிர்ணயம் செய்யவும், அதைக் கொடுக்கும்படி உத்தரவிடவும், சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

ரஸ்தாக்கள்.

செக்ஷன் 79 இச் சட்டப்படி ஏற்பட்ட விதிகளாலோ, அல்லது அவ் விதிகளைத் தழுவிக் கொடுக்கப்படும் லைசென்சுகளில் கண்ட நிபந்தனைகளாலோ அனுமதிக்கப்பட்டாலொழிய (a) பொது ரஸ்தாவிலோ அல்லது அதற்கு மேலோ, சாசுவதமாகவும் சரி, தாற்காலிகமாகவும் சரி, எவரும் சுவர், வேலி அல்லது வேறு வகைத் தடைகளைக் கட்டவும் கூடாது; எவ்விதமான ஆக்கிரமிப்பும் செய்யவும் கூடாது.

(b) எவரும் பொது ரஸ்தாக்களில் குழிகள் வெட்டவும் ரஸ்தாக்களின் மேல் சாமான்களை வைத்திருக்கவும் கூடாது.

(c) எவரும், பொது ரஸ்தாவிலிருந்தோ, அல்லது பஞ்சாயத்துக்குச் சொந்தமான வேறு ஸ்தாவர சொத்துக்களிலிருந்தோ இருபது கஜத்திற்குள் கல் வெட்டி எடுக்கவும், மண் அல்லது வேறு வஸ்துவை அப்புறப்படுத்தவும் கூடாது. ஆனால் உண்மையாக விவசாயக் காரியங்களுக்காகச் செய்யப்படுவதாக இன்ஸ்பெக்டர் அபிப்பிராயப்படும் வேலைகளுக்கு மேற்கண்ட ஷரத்து பொருந்தாது.

(d) சாக்கடை அல்லது ஜலதாரையின் மேலாவது, அதன் எப்பாகத்தின் மேலாவது எவரும் எவ்விதக் கட்டடமும் கட்டக்கூடாது.

(e) எவரும், பஞ்சாயத்துக்குச் சொந்தமான பொது ரஸ்தாவிலோ, அல்லது வேறு பூமியிலோ, எவ்வித மரங்களையும் வைத்துப் பயிர் செய்யக் கூடாது.

(f) அவ்விதமான பொது ரஸ்தா மீதோ, வேறு நிலத்தின் மீதோ, அல்லது புறம்போக்கு நிலத்திலோ, அல்லது செக்ஷன் 60 அல்லது 61 இன்படி பஞ்சாயத்தின் மேற்பார்வைக்குள் இருக்கும் நிலத்திலோ பயிராகி இருக்கும் மரங்களை எவரும் வெட்டவும், அப்புறப்படுத்தவும், அழித்துவிடவும் கூடாது; அம் மரங்களின் இலைகளைக் கழிக்கவும், பட்டைகளைப் பெயர்க்கவும், பழங்களைப் பறிக்கவும், வேறு விதமான சேதங்களைச் செய்யவும் கூடாது.

மார்க்கெட்டுகள்
(பொதுமார்க்கெட்டுகள்)

செக்ஷன் 80 (1) பஞ்சாயத்தானது பொது மார்க்கெட்டுகளாக உபயோகமாகும் பொருட்டு இடங்களை ஏற்படுத்தலாம்; இன்ஸ்பெக்டருடைய அனுமதியின் பேரில், அவ்வித மார்க்கெட்டுகளையோ, அவற்றின் பாகத்தையோ மூடியும் விடலாம்.

(2) இதற்காக ஏற்படும் விதிகளை அனுசரித்து, அப்பொதுமார்க்கெட்டுகளில், கீழே கண்ட கட்டணங்கள் எதையுமோ, எல்லாவற்றையுமோ, விதித்து வசூல் செய்யவும் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரமுண்டு. ஆனால் அக் கட்டணங்களானவை விதிகளால் நிர்ணயம் செய்யப்படும் உயர்ந்த விகிதங்களுக்கு மேற்படாமல், பஞ்சாயத்துக்குத் தகுதியாகத் தோன்றும் விதம் ஏற்படுத்திக்கொள்ளலாம். பஞ்சாயத்து விதிக்கக்கூடிய கட்டணங்களாவன:—(a) அவ்வித மார்க்கெட்டை உபயோகப்படுத்தவோ, அல்லது மார்க்கெட்டில் விற்பனைக்காகச் சரக்குகளை வெளியில் தெரியும்படி வைத்திருக்கவோ கட்டணம். (b) அவ்வித மார்க்கெட்டிலுள்ள கடைகளையோ, ஸ்டால்களையோ, பட்டிகளையோ, நிலைகளையோ உபயோகிக்கக் கட்டணம். (c) சரக்குகளை மார்க்கெட்டில் விற்பனை செய்வதற்காக எடுத்து வரும் வண்டிகள் (மோட்டார் வண்டிகள் உள்பட) கால்நடை அல்லது ஆட்கள் மீது ஒரு கட்டணம். (d) அவ்வித மார்க்கெட்டுகளில், விற்பனைக்காகக் கொண்டுவரப்படும் பிராணிகள் மீது கட்டணம். (e) அவ்வித மார்க்கெட்டுகளில் தொழில் நடத்தும் தரகர்கள், கமிஷன் ஏஜண்டுகள், எடை போடுகிறவர்கள், அளப்பவர்கள் இவர்களுக்கு லைசென்சுக் கட்டணங்கள்.

சொந்த மார்க்கெட்டுகள்.

செக்ஷன் 81 (1) இச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு எவரும் சொந்த மார்க்கெட்டுகளைப் புதிதாக ஏற்படுத்தக் கூடாது. ஏற்கனவே சொந்த மார்க்கெட்டுகளை வைத்துக் கொண்டிருப்பவர்களும், இதற்காகச் சர்க்காரால் அறிக்கை மூலம் குறிப்பிடப்படும் வருட ஆரம்பத்திலிருந்து, அவ்வித மார்க்கெட்டுக்களைத் தொடர்ந்து நடத்தவும் கூடாது. (1-4-1952க்குப் பிறகு சொந்த மார்கெட் நடத்தக் கூடாதென்று சென்னை சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.) ஆனால் மேற்கண்டபடி சர்க்கார் அறிக்கை பிரசுரம் செய்யப்படும்போது நடத்தப்பட்டு வரும் சொந்த மார்க்கெட்டின் வருமானத்திலிருந்து அதை வசூல் செய்யவும், நிர்வாகம் செய்யவும் தேவையான தொகைகளையும், விதிகளால் குறிப்பிடப்படும் மற்றத் தொகைகளையும் கழித்துக்கொண்டு

பார்கித் தொகைகள் ஜாடாவும் கல்வி விஷய மாகவோ, தர்மம் அல்லது மத சம்பந்தமான காரியங்களுக்காகவோ மட்டில் செலவு செய்யப் பட்டு வந்திருந்தால், அவ்விதமான சொந்த மார்க்கெட்டுகளை மேலேகண்ட தேதி முதல் மூடவேண்டியதில்லை.

(2) மேற்கண்ட விதம் ஒரு சொந்த மார்க் கெட்டின் வருமானமானது கல்வி, தர்மம், அல்லது மத சம்பந்தமான காரியங்களுக்காகவே செலவு செய்யப்பட்டு வருகிறதா, அல்லவா என்ற தகராறு ஏதாவது ஏற்பட்டால், பஞ்சாயத் தானது இது விஷயத்தைச் சர்க்காருக்குத் தெரியப்படுத்தவதன் பேரில், சர்க்கார் செய்யும் தீர்மானமே முடிவானதாகும்.

(3) மேலே கண்ட உட்பிரிவு (1) இன்படி மூடப்படும் ஒவ்வொரு சொந்த மார்க்கெட்டுக்குப் பதிலாகவும் பஞ்சாயத்தானது ஒரு பொது மார்க்கெட்டை ஏற்படுத்த வேண்டும்.

கல்வி, தர்மம், மதம், சம்பந்த மாக வருமானங்களைச் செலவு செய்யும் சொந்த மார்க்கெட்டுகள் நடத்த லைசென்சு வேண்டும்.

(1) மேலே 81ஆவது செக்ஷனில் குறிப் பிடப்பட்டிருக்கும் சொந்த மார்க்கெட்டுகளை (அதாவது கல்வி, தர்மம், மதம் சம்பந்தமான செலவுகளுக்கே வருமானமானது உபயோ கப்பட்டு வரும் சொந்த மார்க்கெட்டுக்களை) பஞ்சாயத்தினிடமிருந்து லைசென்சு வாங்கிக் கொள்ளாமல் எவரும் நடத்தக் கூடாது. அவ்வித லைசென்சுகள் வருடா வருடம் புதுப் பிக்கப்பட வேண்டும்.

செக்ஷன் 82

(2) (a) லைசென்சு கொடுக்கும்போது, அம் மார்க்கெட்டுக்களை மேற்பார்வை பார்ப்பது, சோதனை செய்வது, சுகாதாரம், ஜலவசதி, சம்பந்தமாகவும் தம் மார்க்கெட்டில் உபயோ கிக்கப்பட வேண்டிய எடைகள் அளவைகள் சம்பந்தமாகவும், வாடகை கட்டணங்கள் சம்பந்த மாகவும் விதிகளால் நிர்ணயிக்கப்படும் மற்ற விஷ யங்கள் சம்பந்தமாகவும் யுக்தமான நிபந்தனைகள் ஏற்படுத்தப் பஞ்சாயத்துக்கு அதிகாரமுண்டு.

(b) குறிப்பிட்ட கெடு முதல் அந்நிபந்தனை களை மாற்றி அமைக்கவும் பஞ்சாயத்துக்கு அதிகாரமுண்டு.

(c) லைசென்சில்கண்ட நிபந்தனைகளை மீறிய காரணத்தினால் லைசென்சை, சஸ்பெண்டு செய்ய வும் ரத்துச் செய்யவும் பஞ்சாயத்துக்கு அதிகார முண்டு.

(d) மேலே (a) (b) (c) பிரிவுகளில் கண்ட பஞ்சாயத்து உத்தரவுகளால் பாதிக்கப்பட்டவர் கள், தேவையானால் அவ்வுத்தரவின் பேரில் இன்ஸ்பெக்டருக்கு அப்பீல் செய்யலாம். அப்பீல் முடியும்வரை பஞ்சாயத்தின் உத்தரவை அமுல் நடத்தாமல் நிறுத்தி வைக்க இன்ஸ்பெக் டருக்கு உரிமை உண்டு.

(3) (a) 1884 ஆம் வருடத்திய ஸ்தல ஸ்தாபனச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பு சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்ட சொந்த மார்க்கெட்டில், மேலே செக்ஷன் 80 (2) இல் கண்ட வகைக் கட்டணங்களை வசூல் செய்யத் தமக்கு உரிமை இருப்பதாகப் பாத்தியம் கொண்டாடுபவர்கள், இன்ஸ்பெக்டருக்கு மனுச் செய்து அப்பாத்தியங்களை அங்கீகாரம் செய்யும் சர்ட்டிபிகேட் ஒன்று பெற்றுக் கொள்ளவேண் டும். அவ்வித மனுவின் பேரில், பஞ்சாயத்துக்கு நோட்டீசு அனுப்பி, அவர்கள் சொல்லும் விஷயங்களைக் கவனித்த பிறகே தான் இன்ஸ் பெக்டர் அம்மனுவின் பேரில் உத்தரவு பிறப் பிக்கவேண்டும்.

(b) இன்ஸ்பெக்டர் மேற்கண்டபடி சர்ட்டிபி கேட் கொடுக்க மறுத்தால், அதனால் பாதிக்கப் பட்டவர், இன்ஸ்பெக்டருடைய உத்தரவுத் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள், தம் முடைய பாத்தியங்களை ஸ்தாபித்துக் கொள்ளத் தாவா செய்யலாம். அவ்விதமான தாவாவில் ஏற்படும் தீர்ப்புக்குட்பட்டு, இன்ஸ்பெக்ட ருடைய உத்தரவே இவ்விஷயத்தில் முடிவான தாகும்.

(4) மேலே (2) ஆவது உட்பிரிவின்படி கொடுக்கப்படும் லைசென்சில், கட்டணம் வசூல் செய்யச் சொந்த மார்க்கெட் காரருக்கு அனுமதி கொடுக்கப்படாவிட்டால் அவ்வித லைசென் சைக் கட்டணமில்லாமலே வழங்கலாம்; ஆனால் கட்டணங்கள் வசூல் செய்ய அனுமதி கொடுக் கும் லைசென்சுகளுக்கு ஒரு கட்டணம் விதிக்கப் படவேண்டும். அம்மார்க்கெட்டின் சொந்தக் காரர் முந்திய வருடத்தில் அம்மார்க்கெட்டி லிருந்து எவ்வளவு வருமானம் அடைந்திருக்கி றாரோ அத்தொகையில் 15 சத விகிதத்திற்கு மேற்படாத தொகையை வாங்கிக்கொண்டு அவ ருக்கு லைசென்சு கொடுக்கப்படவேண்டும்.

(5) லைசென்சு வாங்கிக் கொள்ளாத சொந்த மார்க்கெட்டுகளையும், லைசென்சு சஸ்பெண்டு செய்யப்பட்டுள்ள அல்லது ரத்துச் செய்யப்பட் டுள்ள சொந்த மார்க்கெட்டுகளையும், இச்சட்ட ஷரத்துக்களுக்கு முரணாக நடத்தப்படும் சொந்த மார்க்கெட்டுக்களையும் பஞ்சாயத்தோ அத னிடம் அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தரோ மூடிவிடலாம்.

ஒரு இடமானது மார்க்கெட்டா, அல்லவா என்ற பிரச்னை ஏற்பட்டால், அது விஷயத்தைப் பஞ்சாயத்தானது சர்க்காருக் குத் தெரிவிக்கவேண்டும். சர்க் காரின் தீர்ப்பே முடிவானது.

செக்ஷன் 83

(தொடரும்)

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில் தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவது இயலாது.

ஒவ்வொரு மாதமும் முதல் தேதி முதல் 10ஆம் தேதிக்குள் அனுப்பப்படும் கேள்விகளுக்குத்தான் அடுத்த இதழில் பதில் சொல்லுவது சாதாரணமாகச் சாத்தியமாகும்.

49. கேள்வி: (பொன்னையா—தேனீ) ஒரு வியாபாரி, தம் சொந்த உபயோகத்திற்கு வைத்திருக்கும் மோட்டார் காரை விற்றால், அந்த விற்பனைத் தொகைக்கு விற்பனை வரி உண்டா?

பதில். கிடையாது. ஏனென்றால், ஒரு வியாபாரி தம்முடைய 'மொத்த வியாபாரத் தொகை' (Tourn over) மீது தான் விற்பனை வரி கொடுக்கவேண்டும். (செக்ஷன் 3 (1)—விற்பனை வரிச் சட்டம்.) மொத்த வியாபாரத் தொகை அல்லது 'டர்ன் ஓவர்' என்பது ஒரு வியாபாரியால் சரக்குகள் விற்பனை செய்யப்படும் மொத்தத் தொகையைக் குறிக்கும். விற்பனை (Sale) என்பது வியாபாரம் அல்லது வர்த்தகத்தில் ஒருவர் சரக்குகளின் பாத்தியத்தை மாற்றுவது—என்று அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. [செக்ஷன் 2 (h)—2(i)]. ஆகையால் வியாபாரியானவர் அவர் நடத்தும் வியாபாரம் அல்லது வர்த்தகத் தொழிலின் ஒரு பாகமாகச் செய்யும் விற்பனைகளுக்குத்தான் விற்பனை வரி உண்டு. அவருடைய சொந்த சௌகரியத்திற்காக வைத்துக்கொண்டிருக்கும் சாமான்களை விற்பனை செய்தால் அது டர்ன் ஓவரில் சேராது. அப்படி இல்லாவிட்டால், அடிக்கடி விலை உயர்ந்த கார்களை விற்றுவிட்டு, புதிய கார்களை மாற்றிக்கொணடிருக்கும் சர்க்கார் அதிகாரிகள் கூட விற்பனை வரி கொடுக்க நேரிடும்.

50. கேள்வி: (வீ. பழனியாண்டி சேர்வை—மலேயா.) அண்ணன் தம்பி இருவர், தகப்பன் தேடிய சொத்தைப் பாகம் பிரித்துக்கொண்ட பிறகு, அதில் ஒருவர் புதுப்பூமி ஒன்று வாங்கி, அதன் பேரில் ரூ. 600 கடன் வாங்கினார். அக்கடனின் வட்டிக்காக அப்பூமியையே அனுபவிக்கும்படி கடன் கொடுத்தவருக்குப் பத்திரமும் எழுதிக்கொடுத்து, அவர் இறந்துவிட்டார். இறந்தவருக்கு ஒரு மகன். அவனும் அக்கடனைக் கொடுத்துத் தீர்க்க முடியவில்லை. ஆனால் அவருக்காக வேறு மூன்றாம் நபர் ஒருவர் அக்கடனைத் தீர்த்துக் கடன் பத்திரத்தை மட்டில் வாங்கி வைத்துக்கொண்டார். பூமிக்

குடையவரிடம் தம் பெயருக்குப் புதுக்கடன் பத்திரம் எழுதி வாங்காமல் அவர் நம்பிக்கையாக இருக்கையில், பூமிக்குடையவர் இறந்துவிட்டார். கடன் தொகையைக் கட்டிய அம்மூன்றும் மனிதர், இறந்தவருடைய தகப்பனின் சகோதரரின் மகனிடம் அப்பூமியை வாரசாகுபடிக்கு ஒப்படைத்தார். அவரும் முதலில் அப்பூமியை வாரசாகுபடிக்கு ஒப்புக்கொண்டு, இப்போது—"என் பங்காளியின் பூமி இது. உமக்கு வாரம் கொடுக்க முடியாது" என்று சொன்னால், கடன் தொகையைக் கட்டியவர் கோர்ட்டில் நடவடிக்கை செய்யலாமா?

பதில். கடன் தொகையைக் கட்டிய மூன்றும் பேருக்கு அப்பூமியில் பாத்தியம் ஒன்றும் ஏற்படவில்லை. தாம் கொடுத்த தொகையானது, தமக்குத் திரும்பக் கிடைக்கவேண்டுமென்று, இறந்த பூமிக்காரருடைய வாரிசுகளின் பேரில் அவர் தாவா செய்து டிக்ரி வாங்கி, அப்பூமியின் மீதோ, இறந்தவருடைய வேறு சொத்துக்களின்மீதோ தொடர்ந்து வசூல் செய்துகொள்ளலாம்.

ஆனால், தமக்குப் பாத்தியம் இருக்கிறதோ, இல்லையோ, அப்பூமியை அவர் தம்மிடம் வைத்துக்கொண்டு, அதை வேறு எவருக்காவது குத்தகை அல்லது வார சாகுபடிக்கு விட்டிருந்தால், அவரிடம் அப்பூமியைச் சாகுபடிக்கு ஒப்புக் கொண்டவர், அதைத் திரும்ப அவரிடம் ஒப்படைக்காமல், அவருடைய பாத்தியத்திற்கு விரோதமாகத் தாமே பாத்தியம் கொண்டாடக் கூடாதென்று ஒரு விதி இருக்கிறது. (ருசுச் சட்டம்-செக்ஷன் 116.) அதாவது சாகுபடிக்கு ஒப்புக்கொண்டவர்—"நான் நிலத்தை உங்களிடம்தான் சாகுபடிக்கு ஒப்புக்கொண்டேன். ஆனால் இந்நிலத்தைச் சாகுபடிக்கு விட உங்களுக்குப் பாத்தியம் கிடையாது"—என்று சொல்ல முடியாது. நிலத்தைச் சாகுபடிக்கு விட்டவருக்கு உண்மையில் யாதொரு பாத்தியமும் இல்லாவிட்டாலும், அவரிடமிருந்து நிலத்தை ஒப்புக்கொண்டவரும் அவர் மூலம் பாத்தியம் கொண்டாடுபவர்களுக்கும் மட்டில்தான் இத்தடை விதி. இத்தடை விதியை ஆதாரமாகக்கொண்டு நிலத்தைச் சாகுபடிதாரிடமிருந்து திரும்ப, சுவாதீனம் வாங்கவும் முடியும்.

51. கேள்வி: (வெங்கடராமய்யர் — பெருகமணி.) ஒரு டிப்டி பஞ்சாயத்து ஆபீசருக்கு, கிராமத்தில் உள்ள ஹோட்டல் லைசென்சை ரத்துச் செய்ய அதிகாரம் உண்டா; அல்லது பஞ்சாயத்துப் போர்டின் கணக்குகளைச் சரிபார்க்க மட்டும்தான் அதிகாரமா? அப்படி அவர் லைசென்சை ரத்துச் செய்தால், அதற்குச் சரியானபடி காரணம் காட்டாமல் ரத்துச் செய்ய முடியுமா?

பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 43 (1) இன்படி எந்த லைசென்சையும் ரத்துச் செய்ய இன்ஸ்பெக்டருக்கு (Inspector of Municipal Councils and Local Boards.) அதிகாரம் உண்டு. ஆனால் சில குறிப்பிட்ட காரணங்கள் இருந்தால்தான் அவர் இவ்விதம் லைசென்சை ரத்துச் செய்யலாம். மேலும் பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 127 (2) இன்படி இன்ஸ்பெக்டரானவர் மேற்கண்ட தம்முடைய அதிகாரத்தை வேறு எந்த உத்தியோகஸ்தருக்கும் மாற்றலாம் என்று இருக்கிறது. அதை அனுசரித்து அதிகாரம் மாற்றப்பெற்ற டிப்டி பஞ்சாயத்து ஆபீசர்கள்தான் லைசென்சுகளை ரத்துச் செய்ய அதிகாரம் உள்ளவர்களாவார்கள். லைசென்சுகளை ரத்துச் செய்யும் அதிகாரமானது இன்ஸ்பெக்டரால் அந்தந்தப் பிரதேச இன்ஸ்பெக்டர்களுக்குத்தான் மாற்றப்பட்டிருக்கிறது. (3-7-1951 சென்னைச் சர்க்கார் கெஜட்—பாகம் I A–பக்கம் 332—பார்க்கவும்.)

52. கேள்வி: (சுப்புக்கவுண்டர்—காளியாபுரம்.) இந்துத் தகப்பனுக்குப் பூர்வீகமாயுள்ள 16 ஏகர் சொத்துக்களையும், தாயாரின் சொந்தமான 10 ஏகர் சொத்துக்களையும் இருவரும் சேர்ந்து விற்பனை செய்து விடுகிறார்கள். விற்பனைத் தொகையிலிருந்து அவ்விருவரும் பட்ட கடன்களைக் கொடுத்தது போக, பாக்கித் தொகையானது சொத்து வாங்கியவரிடமே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஷை கிரய சாசனம் ஏற்படும்போது, அவர்களுக்குள்ள ஒரு ஆண் மைனர் மகன், மேஜரான பிறகு ஷை கிரயத்தின் பாக்கித் தொகையைப் பெற்றுக் கொள்ளுகிறதென்றும், அதுவரை அதற்குள்ள வட்டியை மட்டில் விற்றவர்கள் இருவரும் சேர்ந்து வாங்கிக் கொள்ள வேண்டுமென்றும் கிரயப் பத்திரத்தில் கண்டிருக்கிறது. கிரயம் செய்த நான்கு மாதத்திற்குள் கிரயம் செய்தவர்களுக்கு மற்றொரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. ஷை கிரய பாக்கித் தொகையில் புதிதாகப் பிறந்த ஆண் குழந்தைக்குப் பாத்தியம் இருக்கிறதா?

பதில். கிரய பாக்கித் தொகையில் தாயின் சொத்துக்குள்ள வீதாசாரமான தொகை போக, பாக்கித் தொகையானது, தகப்பனுக்கும் அவருடைய இரு மகன்களுக்கும் பொதுவான குடும்பச் சொத்தாகும். அத்தொகையில் மட்டில் புதிதாகப் பிறந்த ஆண் குழந்தைக்கும் பாத்தியம் உண்டு.

53. கேள்வி: (குப்புசாமி) தஞ்சை ஜில்லாவிலுள்ள ஒரு நிலச்சுவான்தாருக்கு ஒரு கிராமத்தில் ஒரு வேலிக்குமேல் நிலம் உண்டு. அதில் 6 ஏகர் நிலம் ஒரு விவசாயிக்கு வாரச்சாகுபடிக்கு விடப்பட்டிருக்கிறது. இந்த நிலத்தை நிலச்சுவான்தார் வேறு ஒருவருக்குக் கிரயம் அல்லது செட்டில்மெண்ட் செய்தால், கிரயம் அல்லது செட்டில்மெண்ட் பெற்றவர் ஷை சாகுபடிதாரை வெளியேற்றி, தாமே சாகுபடி செய்யவோ, வேறு சாகுபடிதாரிடம் ஒப்படைக்கவோ உரிமை உண்டா?

பதில். தஞ்சை ஜில்லாவில் ஒரு கிராமத்தில் ஒரு வேலிக்குமேல் நஞ்சை நிலமுள்ள நிலச்சுவான்தாரின் எல்லா நிலங்களுக்கும் தஞ்சைச் சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் உண்டு. அச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியில் அந்நிலக்காரருக்கு ஒரு கிராமத்தில் 1 வேலிக்கு மேற்பட்ட நஞ்சை நிலம் இருந்தபடியால் அதன் ஒரு பாகமாகிய 6 ஏகர் நிலத்திற்கும் அச்சட்டம் உண்டு. அதாவது இந்த 6 ஏகர் நிலத்தின் சாகுபடிதாருக்கு அச்சட்டமானது, 5 வருட கெடுவுக்குச் சாகுபடி செய்யும் ஒரு உரிமையையும் சட்டத்தில் கண்ட வேறு உரிமைகளையும் அன்றுதினமே கொடுத்துவிட்டது. இவ்வுரிமைகளுக்குட்பட்டுத்தான் நிலச்சுவான்தார், தம் நிலங்களைப் பராதீனம் செய்ய முடியும். அதாவது இவ்விதம் சட்டம் ஒட்டிக்கொண்ட நிலங்கள் விற்கப்பட்டாலும், அவ்விற்பனை மூலம் அந்நிலங்களைச் சட்டத்திலிருந்து பிரிக்க முடியாது என்று சொல்லலாம். அவ்வித நிலத்தைப் புதிதாகக் கிரயம் அல்லது செட்டில்மெண்ட் மூலம் அடைபவர் பழைய சாகுபடிதாரைச் சட்டத்திற்கு முரணாக நீக்க முடியாது.

54. கேள்வி: (முனிசாமி — கும்பகோணம்.) புகையிலைக்காக மத்திய சர்க்காருக்கு 'எக்சைஸ் டியூட்டி' செலுத்தி விடுகிறார்கள். திரும்பப் புகையிலை விற்பனை செய்யும்போது விற்பனை வரி விதிக்க சென்னை ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டா?

பதில். 1939 ஆம் வருடத்திய 8 ஆவது சென்னைச் சட்டம் சென்னைப் புகையிலை விற்பனை வரி, லைசென்சுச் சட்டம் (The Madras Tobacco Taxation of sales and Licensing Act) எனப்படும். இச்சட்டத்தில் கண்டபடி புகையிலை வியாபாரிகள் லைசென்சு வாங்கிக் கொள்ளவும் வேண்டும்; விற்பனை வரி கொடுக்கவும் வேண்டும். ஆனால் 1—4—1944 முதல் இச்சட்டம் அமுல் நடக்காமல் சென்னைச் சர்க்கார் நிறுத்தி வைத்திருந்தனர். ஏனென்றால் 1-4-1943 முதல் புகையிலைக்கு மத்திய சர்க்கார் சுங்க வரி (Excise Duty) விதித்தனர். புகையிலைக்கு இரண்டு வரிகள், அதாவது மத்திய சர்க்கார் ஒரு வரியும், ராஜ்ய சர்க்கார் ஒரு வரியும் விதிக்கப்படுவதைத் தடுக்க மத்திய சர்க்காரும் சென்னை சர்க்காரும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர். அதன்படி சென்னைச் சர்க்கார் ஒரு சட்டம் இயற்றிக் கொண்டனர், அதாவது சென்னைப் புகையிலை விற்பனை வரி லைசென்சுச் சட்டம் அமுல் நடத்தப்படாதென்றும், ஆனால் பிறகு தேவையான காலத்தில் அச்சட்டத்தைச் சென்னைச் சர்க்கார் அமுலுக்குக் கொண்டு வரலாமென்பதுதான் இச் சட்டம். மத்திய சர்க்கார் வசூல் செய்யும் புகையிலை எக்சைஸ் டியூடியில் ஒரு ஒரு பாகத்தை இது வரை சென்னைச் சர்க்காருக்கு நஷ்ட ஈடாகக் கொடுத்து வந்தனர். ஆனால் நிதிக் கமிஷனின் சமீபகாலச் சிபார்சின் பேரில், மத்திய சர்க்கார் இந்த நஷ்ட ஈடு கொடுப்பதை 1-4-1953 முதல் நிறுத்தி விட உத்தேசித்திருக்கின்றனர். ஆகையால் 1-4-1953 முதல் 1939 ஆம் வருடத்திய புகையிலை விற்பனை வரி லைசென்சுச் சட்டம் அமுல் நடத்தப்படுமென்று சென்னைச் சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர். புகையிலைக்கு விற்பனை வரி விதித்திருக்கும் சென்னைச் சட்டம் ஏற்கனவேயே இருக்கிறது. இப்போது அது 1-4-1953 முதல் அது அமுல் நடத்தப்படும் என்று சென்னைச் சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பித்திருப்பதே போதும். இந்த இதழ் 'வரிகள்'—என்ற பகுதியைப் பார்க்கவும்.

55. கேள்வி: (ஷை) (1) தற்சமயம் நன்செய் நிலங்களைப் போக்கியம் வாங்கினால் வருடத்தில் 30 ல் 1 பங்கு கழிவு உண்டா. (2) போக்கியத்திற்காக வைக்கப்பட்ட நிலங்கள் அதிக வருமானமுள்ளது. ஆகையால் 100 க்கு $5\frac{1}{2}$ வட்டி போக அதிக வருமானத்தை அசல் தொகையில் கழித்துக் கொள்ள வேண்டுமென்று போக்கியம் கொடுத்தவர் வாதாட முடியுமா?

பதில். (1) 30-9-1947 க்குப் பின் ஏற்பட்ட போக்கியங்களுக்கு அசலில் வருடா வருடம் 30 ல் 1 பங்கு கழிவு ஏற்படாது.

(2) முடியாது.

56. கேள்வி: (ரத்தினம் செட்டியார்—புதுக்கோட்டை.) முனிசிபாலிட்டியிலுள்ள ஒரு வீட்டை ஈடாக வைத்துக் கடன் வாங்கப்படுகிறது. கடன் வாங்கியவர் மீது தாவா தொடரப்பட்டு, டிக்ரி ஆகி அவ்வீடு கோர்ட் ஏலம் போய், டிக்ரி பெற்றவரே அதை ஏலத்தில் வாங்கி விடுகிறார். பழைய வீட்டுக்காரர் சுமார் நாலு

ஐந்து வருடங்களாக முனிசிபல் வரி கட்டவில்லை. வீட்டைக் கோர்ட் மூலம் வாங்கியவர் பழைய வரிபாக்கியைக் கொடுக்க வேண்டுமா? அப்படிக் கொடுக்கா விட்டால் அவர் மீது 'பிராசிகூஷன்' நடவடிக்கை எடுக்க முனிசிபாலிட்டியாருக்கு அதிகாரம் உண்டா?

பதில். முனிசிபாலிட்டிச் சட்டத்தின் செக்ஷன் 86-ன்படி வீட்டின் சொந்தக்காரர் தான் வீட்டு வரியைக் கொடுக்கக் கடமைப் பட்டவர். வீட்டை கோர்ட் ஏலத்தில் வாங்கிய வர் தாம் வாங்கிய தேதி முதல் உள்ள வரியைத் தான் கொடுக்கக் கடமைப் பட்டவராவார். ஆகையால் அவர் பழைய வரி பாக்கிகளைக் கொடுக்கவில்லை என்று அவர் மீது கிரிமினல் பிராசிகூஷன் நடவடிக்கை எடுப்பதைச் சட்டம் அனுமதிக்கவில்லை. ஆனல் பழைய பாக்கியை யும் முனிசிபாலிட்டியார் வசூல் செய்ய வேறு சில ஷரத்துக்கள் இருக்கின்றன. முனிசிபல் வரிக்கு அவ்வீட்டின் பேரில் ஒரு முதல் ஜாமீன் பாத்தியம் (First Charge) இருக்கிறது. அதைப் பொறுத்து முனிசிபாலிட்டியார் சிவில் கோர்ட்டில் தாவா செய்து செலவுத் தொகை யுடன் வசூல் செய்து விடலாம்.

57. கேள்வி: (ராமசாமி-ஆச்சாபுரம்) 1924-ல் நிலச்சுவான்தார் அச்சொத்தை ஒருவருக்கு அடமானம் வைத்தார். பிறகு 1930-ல் அதே நிலத்தை அவர் வேறு ஒருவருக்குப் போக்கிய மாக வைத்திருக்கிறுர். 1944-ல் ஒருவர் அப் போக்கியத்தை மேடோவர் பெற்றிருக்கிறுர். மறுபடி 1945 ல் வேறு ஒருவர் அதையே மறு மேடோவர் பெற்று இருக்கிறுர். போக்கியச் சட்டப்படி நிலச்சுவான்தாருக்கு ஏதாவது தள்ளுபடி உண்டா இல்லையா?

பதில். 30--9--1937 க்குப் பின் 30-1-1948 க்கு முன் போக்கியம் மேடோவர் செய்யப்பட்டிருக்கிற படியால், நிலச்சுவான் தாருக்கு இப்போக்கிய அசல் தொகையில் யாதொரு தள்ளுபடியும் ஏற்படாது.

58. கேள்வி: (குப்புசாமி அய்யர் — நாக பட்டிணம்.) தஞ்சை ஜில்லாவில் அண்ணன் தம்பி (இந்துக்கள்) இருவருக்கும் பொதுவாக இருந்த 1 வேலிக்கு அதிகமான குடும்ப நிலங் களை அவர்கள், 1952 எப்ரல் மாதத்தில் வாய் மொழியாகப் பாகம் செய்து கொண்டனர். நிலங்கள் சம்பந்தப்பட்ட வரையில் ஒருவருக்கு 3 ஏகர் சொச்சமும் மற்றவருக்கு 4 ஏகர் சொச்ச மும் பாகம் கிடைத்திருக்கிறது. 1952 மே மாதத்திலேயே அவரவர் பெயருக்குத் தனித் தனி குத்தகைச் சீட்டுகளும் வாங்கப்பட்டன. பாகபத்திரம் மட்டும் 1952 ஜுன் மாதத்தில் எழுதப்பட்டு ஜுலை மாதத்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. ஆனல் பட்டா மட்டில் இன்னும் மாருமல் 'குடும்பத் தலைவர்' என்ற முறையில் அண்ணன் பேரிலேயே இருந்து வருவதால், தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டப்படிக்குத்தான் குத்தகை கொடுக்க முடியும் என்று குத்தகைதார் சொல்ல இடமுண்டா? குத்தகைதார்கள் குத்தகை கொடுக்கா விட்டால் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியும்.

பதில். தஞ்சைச் சட்டம் அமுலுக்கு வருவ தற்கு முன்பே சகோதரர்களுக்குள் பாகம் ஏற் பட்டு விட்டபடியால், அச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியில் எந்தச் சகோதரருக்கும், ஒரு வேலிக்கு மேல் நிலம் இல்லை. ஆகையால் தஞ்சைச் சட்டம் இவர்களுடைய நிலங்களுக்குக் கிடையாது. பட்டா மாருமலிருந்தாலும் பாதக மில்லை. ஒப்பந்தப்படி குத்தகைதார் குத்தகை கொடுக்காவிட்டால் சிவில் கோர்ட்டில் தாவா செய்து வசூல் செய்யத் தடை எதுவுமில்லை.

59. கேள்வி: (அக்கமுத்து-மோஹனூர்.) ஒருவருடைய பட்டா நிலத்தில், வேறு ஒருவர் நடப்பதற்குப் பாத்தியம் உண்டா? நிலத்துப் பிளானில் யாதொரு அளவுமில்லாமல் நடை பாதையைக் காண்பிக்கும் புள்ளிகள் மட்டில் (டூடையில்) பட்டா நிலத்துள்ளேயே இருக் கிறது.

பதில், ஒருவருடைய பட்டா நிலத்தில் வேறு ஒருவர் நடப்பதற்குப் பல வகைகளில் பாத்தியம் ஏற்படலாம். தொன்று தொட்ட வழக்கப்படி கிராமவாசிகளோ, பொதுமக்களோ ஒரு பட்டா நிலத்தின் பேரில் நடந்து செல்லு வதற்குப் பாத்திய மிருந்தால் அதைப் பிளானில் புள்ளிகள் மூலம் காண்பித்திருப்பார்கள்.

60. கேள்வி: (மாரி-ராயப்பேட்டை) இந்த ஒருவர், வாய்மொழியாக வாங்கி 25 வருடங் களுக்கு அனுபவித்த வீட்டைத் தம் மகன் பேரில் எழுதி ரிஜிஸ்டர் செய்துவிட்டு இறந் தார். இறந்தவருடைய சகோதரர், அவ் வீட்டை வாங்க நானும் கொஞ்சம் பணம் கொடுத்திருக்கிறேன் என்று சொல்லி, இறந்த வரின் மகன்மேல் வழக்காட சட்டம் இடம் தருமா?

பதில். வீடு வாங்கக் கடன் கொடுத்தவருக்கு, அக்காரணத்தினல் வீட்டிலேயே பாத்தியம் ஏற்பட்டுவிடாது. ஆனல் தாம் கொடுத்த கடன் தொகையைக் காலாவதியாகாமல் பார்த்துக் கொண்டிருந்தாராளுல், அதை வசூலிக்க அவர் வழக்குத் தொடரலாம்.

61. கேள்வி: (L. 3527.) சென்னை அசெம்பிளி சட்ட சபைக்கு நின்று ஜயித்த பிறகு, தேர்தல் கோர்ட் அது செல்லாதென்று தீர்ப்பு அளித்துவிட்டால், இந்த ஸ்தானத்தைப் பெற அப்பீல் உண்டா? எந்தக் கோர்ட்டில் அப்பீல்?

பதில். அப்பீல் கிடையாது.

62. கேள்வி: (ராமச்சந்திரன்—மயூர்.) ஒருவர் 1953 ஜனவரி மாதத்தில் நிலத்தை மகசூலுடன் விற்றிருந்தால் 'லெவி' நெல்லுக்கு யார் பொறுப்பாளி. சட்டப்படி லெவி நெல் அளக்கவேண்டியவர் யார்?

பதில். 'லெவி'க் கொள்முதல் உத்தரவு 20-11-1952ல் அமுலுக்கு வந்தது. அத் தேதிக்குப் பிறகு, கலெக்டருடைய எழுத்து மூலமான அனுமதி பெற்றுத்தான் ஒருவர் நிலத்தின் மகசூலை விற்பனை செய்யமுடியும். அவ்வித அனுமதி இல்லாவிட்டால், மகசூலை விற்றவரே 'லெவி' நெல் அளக்க ஜவாப்தாரி யாவார். ஆனால் மகசூல் நீக்கி நிலத்தை மட்டில் விற்க யாதொரு தடையுமில்லை.

63. கேள்வி (டை) தஞ்சைச் சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டப்படி—ஒரு பண்ணையாள் சரியாக வேலை செய்யாவிடில், அப்பண்ணையாளை நஷ்ட ஈடு கொடுக்காமல் பண்ணையிலிருந்து நீக்கலாமா? பண்ணையாளை, நஷ்டஈடு கொடுக்காமல், நீக்கச் சரியான காரணங்கள் எவை?

பதில். எந்த எந்தக் காரணங்களைக் கொண்டு, நஷ்ட ஈடு கொடுக்காமல் ஒரு பண்ணையாளை நீக்கமுடியும்—என்று தஞ்சைச் சட்டத்தில் வியக்தமாக ஒன்றுமில்லை. ஆனால் பண்ணையாளை நீக்கியது 'நியாயமல்ல' என்றோ 'சரியல்ல' என்றோ (Not just and Proper) சமரச அதிகாரிக்குத் தோன்றினால், அப்பண்ணையாளைத் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவர் உத்தரவிடலாம். இவ்வுத்தரவுப்படி பண்ணையாளைத் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ளாவிட்டால் தான் நஷ்ட ஈடு கொடுக்கும்படி ரிவின்யூ கோர்ட் உத்தரவிடும். ஆகையால் பண்ணையாளை நீக்கிய காரணங்கள் நியாயமானவை என்றோ, சரியானவை என்றோ நிலச்சுவான்தாருக்கு மட்டில் தோன்றினால் போதாது. அதை நிர்ணயம் செய்ய வேண்டியவர் சமரச அதிகாரி. உதாரணமாக ஒரு பண்ணையாள் வேண்டுமென்று சரிவர சாகுபடி வேலைகளைச் செய்யாமலோ, அடிக்கடி வேலைக்கு வராமலோ இருந்தால் அக்காரணங்கள் நியாயமாக கருதப்படலாம்.

64. கேள்வி: (சீதாராம ராவ்—மதராஸ்.) ஒரு 'பாக்டரி'யின் சொந்தக்காரர் 'பாக்டரி'யை மூடிவிடுகிறார். அதைப்பற்றி லேபர் ஆபீசர் விசாரணை நடத்துகிறார். பிறகு பாக்டரியை மூடியவர் மறபடியும் அதை நடத்த ஆரம்பித்தால், முதல் முதலில் அந்தப் பாக்டரியில் வேலை செய்து வந்தவர்களை வைத்துக் கொள்ளாமல், புதியவர்களைக்கொண்டு நடத்த, பாக்டரிக்காரருக்கு உரிமை உண்டா?

பதில்: தாம் செய்யும் தொழிலை எவரும் இஷ்டப்படும்போது மூடிவிட எவருக்கும் ஒரு ஜீவாதார உரிமை உண்டு. (இது சம்பந்தமாகச் சமீபத்தில் சென்னை ஹைகோர்ட்டார் ஒரு வழக்கில் தீர்ப்பளித்திருக்கின்றனர். "வக்கீல்" 1953-மார்ச்மாத இதழ் பக்கம் 19 பார்க்கவும்.) ஆனால் ஒருவர் நடத்தும் பாக்டரியைச் சில காலம் மூடிவைத்து மறுபடியும் திறக்கும்போது அதன் தொழிலாளர்களைத் தள்ளிவிட்டால் அது ஒரு தொழில் தகராறு என்று கருத இடமிருக்கிறது. தொழில் கோர்ட் இது விஷயத்தில் யுக்தமான உத்தரவுகள் செய்யலாம்.

65. கேள்வி: (ஜயராமய்யா—அரகண்டநல்லூர்.) ஒரு கிறிஸ்தவக் குடும்பம். அதில் நான்கு சகோதரர்கள். இவர்களில் முதல் சகோதரர் சில சொத்துக்களைத் தம் பேரில் கிரயம் பெற்றிருக்கிறார். அவர் இறந்து இருபது வருடங்களாகின்றன. அவருக்கு மனைவியும், பெண்ணும் இருக்கிறார்கள். முதல் சகோதரர் இறந்த பிறகு இரண்டாவது சகோதரர் சில சொத்துக்களைத் தம் பெயரில் வாங்கி இருக்கிறார். முதல் சகோதரருடைய பெண்சாதிக்கும் பெண்ணுக்கும் ஒன்றும் கொடுக்காமல், முதல் சகோதரருடைய சொத்துக்களையும், இரண்டாவது சகோதரருடைய சொத்துக்களையும் 2,3,4 சகோதரர்கள் பாகம் பிரித்துக்கொண்டு விட்டார்கள். முதல் சகோதரருடைய சொத்து அவருடைய மனைவிக்கும் பெண்ணுக்கும் ஏகதேச பாத்தியமுள்ளதா, அல்லது நாலில் ஒரு பாகம்தான் கிடைக்குமா?

பதில். கிறிஸ்தவர்களுக்குப் பிரிபடாத குடும்பம் அல்லது 'அவிபக்த குடும்பம்'—என்பது கிடையாது. அவரவர்களுடைய சொத்து அவரவருடைய வார்சுகளுக்குத தான் போகும். இறந்த முதல் சகோதரருடைய வார்சுகளாகிய மனைவிக்குச் சொத்தில் 3ல் 1 பாகமும், பாக்கி பெண்ணுக்கும் போகும். ஆனால் இவர்கள் தங்களுடைய பாத்தியத்தை வற்புறுத்தாமல் இருந்து, அச்சொத்துக்களை மற்ற சகோதரர்கள், தங்களுடைய சொத்தாக

12 வருடங்களுக்குமேல் அனுபவித்துப் பிரித்துக்கொண்டிருந்தால், இறந்தவருடைய மனைவியும் பெண்ணும், தங்கள் பாத்தியத்தைக் காலாவதியால் இழந்தவர்களாவார்கள்.

66. கேள்வி: (கோவிந்தசாமி — குடவாசல்.) தஞ்சைச் சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் அமுல் உள்ள ஒரு கிராமத்தில் ஒரு வேலிக்குமேல் நஞ்சை நிலமுள்ள பட்டாதார் 1952—53 விவசாய வருடத்தில் பழைய சாகுபடிதாரை விலக்கிப் பண்ணையில் சாகுபடி செய்திருக்கிறார். அறுவடை முடிந்ததும் சாகுபடிதாருக்கு நிலங்களைக் கொடுக்கும்படி சமரச அதிகாரி உத்தரவு செய்திருக்கிறார். அப்பட்டாதார் டை நிலத்தை ஒரு வேலிக்குட்பட்ட வேறு பட்டாதாருக்கு கிரயம் செய்து விட்டால், சமரச அதிகாரியின் உத்தரவுப்படி பழைய சாகுபடிதாரே நிலத்தில் பிரவேசித்துச் சாகுபடி செய்யலாமா; அல்லது புதிதாக நிலம் வாங்கியவர் அதைப் பண்ணையில் வைத்துக் கொண்டோ புதிய சாகுபடிதாருக்கோ கொடுக்கலாமா?

பதில். அவ்விதம் நிலத்தைக் கிரயம் செய்வதால், சமரச அதிகாரியின் உத்தரவு ரத்தாகி விடாது. ஆனால் பழைய சாகுபடிதார் தமக்குச் சாதகமாக ஏற்பட்டிருக்கும் உத்தரவை, தஞ்சைச் சட்ட விதி 17-இன்படி நிறைவேற்றி நிலத்தைத் தம் சுவாதீனத்தில் கொண்டுவரலாமே ஒழிய, தாமே நிலத்தில் பலாத்காரமாகப் பிரவேசிக்கக் கூடாது.

67. கேள்வி: (சுப்பிரமணிய செட்டியார்— வலங்கைமான்.) ஒரு வருடத்தில் எவ்வளவு ரூபாய் வருமானம் வந்தால் இன்கம்டாக்ஸ் வரி கட்டவேண்டும்.

பதில். முந்திய வருடத்தில் ஒரு தனி நபருக்கு ரூ. 3600க்கு மேலும், பிரிபடாத இந்துக் குடும்பத்திற்கு ரூ. 7200க்கு மேலும் வருமானம் வந்தால் 1952—53 நிதி வருடத்தில் வருமான வரி (இன்கம்டாக்ஸ்) விதிக்கப்படும். ஆனால் ஒவ்வொரு வருடமும் எவ்வளவு அளவுக்குமேல் வருட வருமானமுள்ளவர்கள்தான் அவ்வருடத்தில் வருமான வரி விதிக்கப்படவேண்டுமென்பதையும், வருமானவரி விகிதங்களையும், பார்லிமெண்ட் சபைதான் நிர்ணயம் செய்யவேண்டும். தனி நபர் ரூ. 4200க்கு மேலும் பிரிபடாத இந்துக் குடும்பங்கள் ரூ. 8400க்கு மேலும் முந்திய வருடத்தில் வருமானம் அடைந்தால்தான் 1953—54 நிதி வருடத்தில் வருமானவரி விதிக்கப்படவேண்டுமென்று சட்டம் செய்ய இவ்வருட நிதி மசோதாவில் ஒரு ஷரத்து இருக்கிறது. இது சட்டமாகும்.

68. கேள்வி: (கந்தசாமிக் கவுண்டர்—வழுக்கப்பாறை.) ஆண் சந்ததி இல்லாத ஒரு இந்து 1946ல் இறந்துபோனார். அவருடைய மேஜரான மகன் 1945ல் இறந்து போனார். இப்போது அவருக்கு ஒரு மனைவியும், இறந்துபோன மகனுடைய மனைவியும், தாயாரும், ஒரு மேஜர் ஆனபிறகு புத்தி சுவாதீனமில்லாத தம்பியும், மூத்த சகோதரியும், சகோதரி மகனும், தாயாதிகளும் இருக்கிறார்கள். இறந்துபோனவருடைய சொத்துக்களுக்கு வார்சுகள் யார்?

பதில். 1937ஆம் வருடத்திய இந்து ஸ்திரீகளின் சொத்துரிமைச் சட்டப்படி 1946-ல் இறந்த இந்துவுக்கு அவருடைய மனைவியும், மருமகளும்தான் வார்சாவார்கள். இவ்விருவர்களும், ஆயுள்வரைதான் சொத்துக்களை அனுபவிக்கலாம். ஒருவர் இறந்தால் எல்லாச் சொத்துக்களையும் மற்றவர் ஆயுள்வரை அனுபவித்து, இருவரும் இறந்த பிறகு, தாய்தான் வார்சு ஆவாள். இவளும் தன் ஆயுள்வரைதான் சொத்துக்களை அனுபவிக்கலாம். அவளும் இறந்த பிறகு, அவருடைய தம்பியேதான் இச்சொத்துக்களுக்குச் சர்வ சுதந்தரமுள்ள வார்சு ஆவார். புத்தி சுவாதீனமில்லாவிட்டாலும் பாதகமில்லை. பிறவிமுதல் புத்தி சுவாதீனமில்லாமலிருப்பவர்களுக்குத்தான் வார்சு பாத்தியம் கிடையாது.

69. கேள்வி: (ஜட்ரூஸ்—முத்துப்பேட்டை) (a) முதல் வகுப்புப் பஞ்சாயத்துப் போர்டு பிரசிடெண்ட் தேர்தலுக்கு டிபாசிட் தொகை எவ்வளவு கட்டவேண்டும்? (b) சொந்த வீடு இல்லாமல் பஞ்சாயத்தில் வரியே கொடுக்காத நபர், வாக்காளர் ஜாப்தாவில் பெயர் இருந்தால் அப்பஞ்சாயத்து போர்டு தேர்தலுக்கு நிற்கலாமா?

பதில். (a) ஷெடியூல் வகுப்பினர் ரூ. 5-ம் மற்ற அபேட்சர்கள் ரூ. 20-ம் டிபாசிட் கட்டவேண்டும். (b) தேர்தலுக்கு அபேட்சகராக நிற்க அப்பஞ்சாயத்துப் போர்டின் வாக்காளர் ஜாப்தாவில் பெயர் இருந்தால் போதும். பஞ்சாயத்தில் வீடு இருக்கவேண்டுமென்றோ, வரி கொடுக்கவேண்டுமென்றோ கிடையாது. மேலும் வாக்காளர் ஜாப்தாவில் பெயர் இருப்பவர்கள்தான் அபேட்சகராக நிற்க முடியும். வீடு இருந்தும், வரி கொடுத்தும் வாக்காளர் ஜாப்தாவில் பெயர் இல்லாதவர்கள் அபேட்சகராக நிற்கவும் முடியாது, "வோட்" போடவும் முடியாது.

70. கேள்வி: (கந்தசாமி—ஏரமங்கலம்.) ஒரு கிராமத்தில் ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனி மயானக்கரை உண்டு. ஒரு பிரிவினர்

சில வருடங்களாக ஒரு சொந்தமான இடத்தில் மயானக்கரை வைத்துவிட்டார்கள். அந்த இடத்திலிருந்து வீடுகள் மூன்று சங்கிலி தூரம் தான் இருக்கிறது. புகை, வீடுகளுக்கு வந்து சேருகின்றது. அதனால் வேறு கெடுதிகளும் ஏற்படுகின்றன. மயானக் கரை எவ்வளவு தூரத்தில் இருக்கவேண்டும்? அந்த இடத்திலிருந்து அதை மாற்றப் பஞ்சாயத்து போர்டுக்கு அதிகாரமுண்டா? வேறு எந்த அதிகாரிகளிடம் கேட்கலாம்?

பதில். பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் (f) ஷரத்தின்படி பஞ்சாயத்து எல்லைக்குள் யுக்தமான இடங்களில் மயானக்கரை ஏற்படுத்தவும் அதைப் பராமரிக்கவும் பஞ்சாயத்துக்கு அதிகாரமுண்டு.

71. கேள்வி: (விவசாயிகள் சங்கம்-அய்யலூர்) ஒரு பஞ்சாயத்து எல்லைக்குள் ஒரு தனி நபருடைய 'பிரைவேட் மார்க்கெட்' சட்டப்படி அனுமதிக்கப்படுமா?

பதில். 1950ஆம் வருடத்திய சென்னைக் கிராமப் பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 80இன் படி கிராமப் பஞ்சாயத்துக்கள் பொது மார்க்கெட்டுகள் (Public Markets) ஏற்படுத்த உரிமை உண்டு. கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 1-4-1951-க்குப் பின்பு எவரும் பஞ்சாயத்து எல்லைக்குள் புதிதாகச் சொந்த மார்க்கெட்டுகள் (Private Markets) ஆரம்பிக்கக் கூடாதென்றும்; அதற்கு முன்பே உள்ள சொந்த மார்க்கெட்டுக்களையும் சர்க்காரால் குறிப்பிடப்படும் தேதிக்குப் பின்பு தொடர்ந்து நடத்தக் கூடாதென்றும் செக்ஷன் 81இல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை அனுசரித்து 1952—53 வருடம் ஆரம்பமான பிறகு, அதாவது 1—4—1952க்குப் பின்பு, எவரும் சென்னை ராஜ்யத்திலுள்ள எந்தக் கிராமப் பஞ்சாயத்து எல்லைக்குள்ளும் சொந்த மார்க்கெட்டுகள் நடத்தக்கூடாதென்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர். (5—2—1952 — சென்னைச் சர்க்கார் கெஜட்—பாகம் IA —பாகம் 66—G. O. 139.)

குறிப்பு:—கல்வி, தர்மம், அல்லது மத விஷயங்களுக்காக, ஒரு சொந்த, மார்க்கெட்டின் நிகர வருமானம் செலவு செய்யப்பட்டு வந்தால், அவ்வித மார்க்கெட்டுகளுக்கு மட்டில் இவ்விதி கிடையாதென்று செக்ஷன் 81-இலேயே இருக்கிறது.

72. கேள்வி: (சுவாமிநாதன் — கணபதிப் பாளையம்) 1953 மார்ச்சு 5 ஆம் தேதியுடன் 14-வயது பூர்த்தியான பெண்ணைச் சட்டப்படி மணம் செய்து கொள்ளலாமா?

பதில். பாலிய விவாகத் தடைச் சட்டப்படி (The Child Marriage Restraint Act—1929) 15 வயது பூர்த்தியான பெண்ணைத் தான் மணம் செய்து கொள்ளலாம். இச்சட்டத்தில், முன்பு 14 வயது பூர்த்தியானால் போதுமென்று இருந்தது. 1949 ஆம் வருடத்திய 41 ஆவது மத்திய திருத்தச் சட்டத்தால் 14 என்பது 15-ஆக திருத்தப்பட்டது.

73. கேள்வி: (முத்துசாமி—நாமக்கல்) இந்து சகோதரர்கள் இருவர் பாகப் பிரிவினை செய்து கொண்டு தனித்தனியாய்ச் சொத்துக்களை அனுபவித்து வந்தார்கள். அவர்களில் இளைய சகோதரர் மனைவியையும் ஒரு பெண்ணையும் விட்டு இறந்தார். அப்பெண்ணுக்கு விவாகம் செய்யவும் குடும்பச் செலவுக்காகவும் மனைவியானவள் புருடனுடைய சொத்தை, அதாவது வீட்டை, ஆதாரம் காண்பித்துக் கடன் வாங்கினள். பிறகு அக்கடனைக் கொடுத்து ஷை வீட்டை அடைந்து கொள்ளும்படி தன் மகளுக்கு ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்தாள். ஷை மகளும் யாதொரு சந்ததியு மில்லாமல் விதவையாகிவிட்டாள். தாயும் மகளும் சேர்ந்து ஷை வீட்டின் வாடகையைக் கொண்டு ஜீவிக்கப் போதாமல் கடனும் வாங்கி இருக்கிறார்கள். ஆகையால் தங்களுடைய ஜீவனத்தை முன்னிட்டு ஷை வீட்டை முழுவதுமோ, அல்லது பேர்பாதியோ கிரயம் செய்ய முடியுமா?

பதில். பெண்ணுக்கு விவாகம் செய்யவும் குடும்பச் செலவுக்கும் வீட்டின் பேரில், விதவை, கடன் வாங்கியது செல்லும். ஆனால் அவள் தன் மகளுக்குச் செட்டில்மெண்ட் எழுதி வைத்தது செல்லாது. (அதாவது அவளுடைய ஆயுளுக்குப் பின் அச் செட்டில்மெண்டானது அனந்தர வார்சுகளைக் கட்டுப்படுத்தாது.) ஆனால் தம்முடைய ஜீவனத்திற்காக வேறு வழியில்லாமல் வீட்டையோ, அவசியமான அதன் பாகத்தையோ விற்பனை செய்ய இந்துச் சட்டப்படி விதவைக்கு உரிமை உண்டு. அவ்விதம் செய்தால் அவ்விற்பனை அனந்தர வார்சுகளையும் கட்டுப்படுத்தும்.

74. கேள்வி: (மௌனகுருசாமி—தூத்தாரிப் பாளையம்.) இந்துக் குடும்பத்தில் தகப்பனுடைய சொத்துக்கள், ஆண் வார்சு இல்லாததால், மகளுக்கு வார்சாக கிடைத்திருக்கிறது. அம் மகளுக்கும் இரண்டு மைனர் பெண்கள் தான் உண்டு. ஆனால் கிட்டிய அனந்தர வார்சுகள் உண்டு. இச்சொத்துக்களை, மகளுக்குப் பின் யார் வார்சாக அடைய முடியும்? இச் சொத்துக்களை விற்பதற்கு உரிமை உள்ளவர்கள் யார்?

பதில். ஆண் மக்கள் இல்லாமல் இறந்து போகும் இந்துவுக்கு வார்சுக் கிரமம் கீழே கண்டவாறு:—மனைவி, பெண், பெண்ணின் மகன், தாய், தகப்பன், சகோதரன், சகோதரனுடைய மகன், சகோதரனுடைய மகனுடைய மகன், தகப்பனுடைய தாய், தகப்பனுடைய தகப்பன், மகனின் பெண், பெண்ணின் பெண், சகோதரி, சகோதரி மகன்—தகப்பனுடைய சகோதரர்....இவ்வாறு. முன் சொல்லப்படும் உறவினர் இல்லாவிட்டால் தான் அடுத்தபடி சொல்லப்படுபவர் வார்சாவார். அதற்கு முன் உள்ள உறவினர்கள் ஒருவரும் இல்லாவிட்டால் 'பெண்ணின் பெண்'கள் தான் வார்சுகளாவார்கள்.

75. கேள்வி: (ஷை) இந்துக் குடும்பத்தில் மகளுக்கு உயில் மூலம் செய்யப்பட்ட சொத்தை அம்மகள் அச்சொத்து முழுவதும் விற்பதற்கு உரிமை உண்டா? ஷை மகளுக்கு ஆண் பெண் வார்சுகள் உண்டு. அவள் இறந்த பின் அச்சொத்துக்களை யார் வார்சாக அடைவார்கள்?

பதில். மகளுக்கு, அச்சொத்துக்களைத் தன் ஆயுள் வரை அனுபவிக்கும் பாத்தியம் தான் கொடுக்கப்பட்டிருக்கிறதா, அல்லது அவள் சர்வ சுதந்தர பாத்தியங்களுடன் அச்சொத்துக்களை அனுபவிக்கும் பாத்தியம் கொடுக்கப்பட்டிருக்கிறதா, என்பதை உயிலின் வாசகத்தைக் கொண்டு நிர்ணயம் செய்ய வேண்டும். சர்வ சுதந்தரங்களுடன் அனுபவிக்கும்படி உயில் மூலம் மகளுக்குக் கொடுக்கப்பட்ட சொத்தை அவள் விற்பனை செய்து விடலாம்; அவள் இறந்து விட்டால் அச்சொத்துக்களுக்கு அவளுடைய பெண்மக்கள் தான் வார்சுகள்.

76. கேள்வி (சந்தா நெ. 9477.) ஒரு இந்து விவாகமான ஸ்திரீக்கு, வார்சுக் கிரமத்தில் வந்த சொத்துக்கள் ஏராளமாக இருக்கின்றன. ஷை ஸ்திரீயின் கணவனுக்குச் சொத்து இல்லை. கணவன் மனைவியின் ஊரில் மனைவியுடன் வசித்து வருகிறார். ஆனால் ஷை ஸ்திரீயின் சொத்துக்களை அவருடைய தகப்பனே மானேஜமெண்ட் செய்து வருகிறார். கணவன், மனைவியைத் தம் ஊருக்கு வந்து தம்முடன் தாம்பத்திய வாழ்க்கை நடத்தவேண்டுமென்று வற்புறுத்தவோ, அவளுடைய சொத்துக்களைத் தாமோ அல்லது தமது மனைவியோ தான் நிர்வாகம் செய்யவேண்டும், தகப்பன் நிர்வாகம் செய்யக் கூடாதென்று வற்புறுத்தவோ கணவனுக்கு உரிமை உண்டா?

பதில். மனைவி, தம்முடன் வசித்து, தாம்பத்திய வாழ்க்கை நடத்த வேண்டுமென்று மட்டில் வற்புறுத்த கணவனுக்கு உரிமை உண்டு. ஆனால் அவளுடைய தனிச் சொந்தச் சொத்துக்களை யார் நிர்வாகம் செய்யவேண்டுமென்று சொல்லச் சட்டப்படி மனைவிக்குத் தான் உரிமை. அது மனைவியின் இஷ்டம்; அவளுடைய சொத்து விஷயத்தில் தலையிடக் கணவனுக்குச் சட்டப்படி உரிமை இல்லை.

77. கேள்வி: (L 3431) ஒரு நபர் (இந்தியன் பீனல் கோடு சட்டத்தின்) செக்ஷன் 325-147-149-படி அடிஷனல் செஷன்ஸ் கோர்ட்டில் தண்டனை பெற்று, மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்து குறைந்த தண்டனை பெற்று, விடுதலை யடைந்து ஒரு வருடமாகிறது. அந்த நபர் பஞ்சாயத்துத் தேர்தலில் அபேட்சகராக நிற்கலாமா.

பதில்: நிற்கலாம். ஏனென்றால் ஒரு இழிவான மனோ நிலையைக் காண்பிக்கும் குற்றங்களுக்காக (Offences involving Moral delinquency) தீவாந்தர தண்டனையோ, 6 மாதத்திற்குமேல் சிறைத் தண்டனையோ அடைந்தவர்கள் தான், தண்டனையை அனுபவிக்கும்போதும், அது முடிந்த தேதி முதல் 5 வருடங்கள் வரையிலும் பஞ்சாயத்து அங்கத்தினர் தலைவர் பதவிகளுக்கு நிற்க முடியாது. (பஞ்சாயத்துச் சட்டம் — செக்ஷன் 16) இந்தியன் பீனல் கோடு சட்டத்தின் செக்ஷன் 325 என்பது அபாயகரமான காயங்களைச் செய்வது பற்றிய குற்றம், செக்ஷன், 147, 149-என்பவை கலகம் செய்வது, சட்ட விரோதமாகக் கூடுவது பற்றியவை. இக் குற்றங்கள் இழிவான மனநிலையைக் காண்பிப்பவை அல்ல. திருட்டு, ஏமாற்றல், மோசடி போன்ற குற்றங்கள் தான் இழிவான மனநிலையைக் குறிப்பவை.

78. கேள்வி. (L. 3416) இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண் அவள் புருடன் இருக்கும்போதே விபசாரியாக இருந்தவள்; புருடன் இறந்து பதினைந்து வருடங்களாகி விட்டன. புருடன் உயிருடன் இருக்கும்போதே அவள் புருடனுடைய குடும்பத்தில் இல்லை. அவள் இப்போது புருடனுடைய குடும்பத்திலிருந்து பாகமாவது ஜீவனாம்சமாவது கேட்கலாமா? அல்லது அவள் விபசாரபுருடனிடமிருந்து ஜீவனாம்சம் கேட்கலாமா?

பதில். இரண்டும் முடியாது.

18772

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVIDAIMARUDUR AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. *Editor*:—V. S. VIJAYARAGHAVACHARI, B. A., B. L.

1953-சிவில் கோர்ட்டுகளின் கோடை விடுமுறை நாட்கள்.

[குறிப்பு:—ஆரம்ப தேதி, முடிவு தேதி இரண்டு நாட்களும் விடுமுறைக்குட்பட்டவைகளே.]

சென்னை ஹைகோர்ட்: 4–5–1953 முதல் 3–7–1953 முடிய.

செங்கல்பட்டு ஜில்லா: ஜில்லா கோர்ட்டுக்கும் செங்கல்பட்டு சப்கோர்ட்டுக்கும் 20–4–53 முதல் 11–6–53 முடிய. செங்கல்பட்டு, காஞ்சீபுரம், பூந்தமல்லி, திருவள்ளூர் டி. மு. கோர்ட்டுகளுக்கும் செங்கல்பட்டு ஸ்மால்காஸ் கோர்ட்டுக்கும் 9–5–53 முதல் 11–6–53 முடிய.

வடஆற்காடு ஜில்லா: வேலூர் ஜில்லா கோர்ட்டுக்கும், சப்கோர்ட்டுக்கும் 20-4-53 முதல் 11–6–53 முடிய. வேலூர், ஆரணி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணமலை டி. மு. கோர்ட்டுகளுக்கும் வேலூர் ஸ்மால்காஸ் கோர்ட்டுகளுக்கும் 20–4–53 முதல் 23–5–53 முடிய.

தென்ஆற்காடு ஜில்லா: ஜில்லா கோர்ட்டுக்கும் சப்கோர்ட்டுக்கும் 20–4–53 முதல் 11–6–53 முடிய.

கூடலூர் ஸ்மால்காஸ் கோர்ட், ஷெ அடிஷனல் கோர்ட், கூடலூர், சிதம்பரம், விருத்தாசலம், விழுப்புரம், திருக்கோயிலூர், திண்டிவனம், கள்ளக்குறிச்சி டி. மு. கோர்ட்டுகளுக்கு 20–4–53 முதல் 23-5-53 முடிய.

கிழக்குத் தஞ்சாவூர் ஜில்லா: நாகபட்டிணம் ஜில்லா கோர்ட்டுக்கும் மாயூரம் சப் கோர்ட்டுக்கும் 15–4–53 முதல் 6–6–53 முடிய. மாயூரம், நாகபட்டிணம், சீர்காழி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் டி. மு. கோர்ட்டுகளுக்கும் நாகபட்டிணம் ஸ்மால் காஸ் கோர்ட்டுக்கும் 4–5–53 முதல் 6–6–53 முடிய.

மேற்குத் தஞ்சாவூர் ஜில்லா: ஜில்லா கோர்ட்டுக்கும் தஞ்சாவூர், கும்பகோணம் சப் கோர்ட்டுகளுக்கும் 20–4–53 முதல் 11–6–53 முடிய.

கும்பகோணம், மன்னார்குடி, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், திருவையாறு, வலங்கிமான் டி. மு. கோர்ட்டுகளுக்கும் தஞ்சாவூர் ஸ்மால்காஸ் கோர்ட்டுக்கும் 20–4–53 முதல் 23–5–53 முடிய.

திருச்சிராப்பள்ளி ஜில்லா: திருச்சி ஜில்லா கோர்ட்டுக்கும், திருச்சி, புதுக்கோட்டை சப் கோர்ட்டுகளுக்கும் 20–4–53 முதல் 11–6–1953 முடிய.

திருச்சி ஸ்மால்காஸ் கோர்ட், அரியலூர், கரூர், குழித்தலை, திருச்சிராப்பள்ளி, துறையூர், புதுக்கோட்டை டி. மு. கோர்ட்டுகளுக்கு 20–4–53 முதல் 23–5–53 முடிய.

மதுரை ஜில்லா: மதுரை ஜில்லா கோர்ட்டுக்கும், மதுரை, திண்டுக்கல் சப்கோர்ட்டுகளுக்கும் 20–4–53 முதல் 11–6–53 முடிய.

மதுரை டவுன் ஸ்மால்காஸ் கோர்ட்டுக்கும், திண்டுக்கல், கொடைக்கானல், மதுரை தாலுக்கா, மதுரை டவுன், மேலூர், பழனி, பெரியகுளம், திருமங்கலம் டி. மு. கோர்ட்டுகளுக்கும் 20–4–53 முதல் 23-5-53 முடிய.

ராமனதபுரம் ஜில்லா: ராமனதபுரம் ஜில்லா கோர்ட்டுக்கும் தேவகோட்டை, ராமனதபுரம், சிவகெங்கை சப் கோர்ட்டுகளுக்கும் 20–4–53 முதல் 11–6–53 முடிய.

தேவகோட்டை, மானமதுரை, பரமக்குடி, ராமனதபுரம், சாத்தூர், சிவகெங்கை, ஸ்ரீவில்லிபுத்தூர் டி. மு. கோர்ட்டுகளுக்கு 20–4–53 முதல் 23–5–53 முடிய.

திருநெல்வேலி ஜில்லா: திருநெல்வேலி ஜில்லா கோர்ட்டுக்கும், திருநெல்வேலி, தூத்துக்குடி, சப் கோர்ட்டுகளுக்கும் 28–4–53 முதல் 19-6-53 முடிய. எல்லா டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளுக்கும் 17–5–53 முதல் 19-6-53 முடிய.

கோயமுத்தூர் நீலகிரி ஜில்லாக்கள்: கோயமுத்தூர் ஜில்லா கோர்ட்டுக்கும், கோயமுத்தூர் சப் கோர்ட்டுக்கும், நீலகிரி சப் கோர்ட்டுக்கும், கூடலூர் டி. மு. கோர்ட்டுக்கும் 4-5-53 முதல் 25-6-53 முடிய.

கோயமுத்தூர், தாராபுரம், ஈரோடு, கோபி செட்டிப்பாளையம், கொள்ளேகாலம், திருப்பூர், உடுமலைப்பேட்டை டி. மு. கோர்ட்டுகளுக்கு 4-5-53 முதல் 6-6-53 முடிய.

சேலம் ஜில்லா: சேலம் ஜில்லா கோர்ட்டுக்கும், சப் கோர்ட்டுக்கும் 20-4-53 முதல் 11-6-53 முடிய.

சேலம், சங்கரிதுர்கம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி டி. மு. கோர்ட்டுகளுக்கும் சேலம் அடிஷனல் ஸ்மால்காஸ் கோர்ட்டுக்கும் 20-4-53 முதல் 24-5-53 முடிய.

ஸ்தாபிதம் 1909 போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்

கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத் தைலம்,

கோகுல் கூந்தல் தைலம்

வாசனைப்பாக்கு, பலகாய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்

பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

Sole Agents:

For Madras
SURAJ AGENCIES
MADRAS

For Coimbatore, Palghat & Nilgiris,
B. BALAPATTABI CHETTIAR,
246, VYSYAL STREET, COIMBATORE.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, TDR.